இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 149 | இதழ் : 08 | திகதி : 08.06.2025 | விலை : 50.00


# ஒரே தந்தையின் குழந்தைகளாக வாழ உதவும் தூய ஆவியார்

– திருத்தந்தை 14ஆம் லியோ



போரினால் பிளவுபட்டு, துயரத்தால் சூழப்பட்டுள்ள இவ்வுலகிற்கு அன்பு மற்றும் அமைதியின் தூய ஆவியை நாம் வேண்டிக்கொள்வோம் என்றும், எல்லைகளைத் திறக்கவும், சுவர்களை உடைக்கவும், வெறுப்பைக் கலைக்கவும், விண்ணகத்தில் இருக்கும் ஒரே தந்தையின் குழந்தைகளாக வாழவும் நமக்குத் தூய ஆவியார் உதவுவார் என்றும் கூறினார் திருத்தந்தை 14-ஆம் லியோ.பெந்தக்கோஸ்துப் பெருவிழாவை முன்னிட்டு வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் கூடியிருந்த ஏறக்குறைய 80,000 மக்கள் பங்கேற்ற திருப்பலிக்குத் தலைமையேற்று மறையுரையாற்றியபோது இவ்வாறு எடுத்துரைத்தார் திருத்தந்தை 14-ஆம் லியோ.திருஅவை மற்றும் உலகைப் புதுப்பிக்கின்ற பெந்தக்கோஸ்து நாளில், தூய ஆவியாரின் வலிமையான காற்று நம் மீதும் நமக்குள்ளும் வந்து, நம் இதயங்களின் எல்லைகளைத் திறந்து, கடவுளைச் சந்திக்கும் அருளை நமக்குத் தரட்டும் என்றும், அன்பின் எல்லைகளை விரிவுபடுத்தி, அமைதி ஆட்சி செய்யும் ஓர் உலகத்தைக் கட்டியெழுப்ப நமது முயற்சிகளைத் தக்கவைக்கட்டும் என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை. ☛ 2

## தூய ஆவியார் பெருவிழா திருவிழிப்பு



தூய ஆவியார் பெருவிழாவை முன்னிட்டு யாழ். மறைமாவட்டத்தின் பல இடங்களிலும் திருவிழிப்பு ஆராதனைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. கடந்த 07ஆம் திகதி யாழ். மறைமாவட்ட இறைதியானக் குழுவினரின் ஒழுங்குபடுத்தலில் யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமட மைதானத்திலும் திருவிழிப்பு ஆராதனை ஆரம்பமாகி நடைபெற்றது அன்றையதினம் மாலை ஆரம்பமாகி மறுநாள் அதிகாலைவரை இடம் பெற்ற இத்திருவிழிப்பு ஆராதனையில் யாழ். மறைமாவட்டத்தில் பணியாற்றும் வெவ்வேறு துறவற சபையினர் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரங்களில் வழிபாடுகளை முன்னெடுத்தனர். திருச்செபமாலையுடன் ஆரம்பமாகிய இவ் ஆராதனையில் திருவிழிப்புத் திருப்பலி இடம்பெற்றதைத் தொடர்ந்து அதிகாலை 3 மணிவரை ஆராதனைகள் முன்னெடுக்கப்பட்டன 3 மணிக்கு நற்கருணை ஆராதனையும் 4 மணிக்கு தூய ஆவியார் திருவிழாத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டன. திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார் இத்திருவிழிப்பு ஆராதனையில் ஏராளமான மக்கள் பக்தியுடன் பங்குபற்றினர்.

## ஆயரின் பெயர் கொண்ட திருநாள்



யாழ். ஆயரின் பெயர் கொண்ட திருநாள் விமரிசையாக யாழ். பேராலயத்தில் யூன் 11 ஆம் திகதி காலையில் கொண்டாடப்பட்டது. யாழ். மறைக்கல்வி நடுநிலையமும், கத்தோலிக்க ஆசிரியர் சங்கமும் இணைந்து இவ்விழாவை ஒழுங்கு செய்து ஆயர் தலைமையில் கொண்டாடி மகிழ்ந்தனர். ஆயர், ஆயரில்லத்திலிருந்து பாண்ட் வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு யாழ் மரியன்னை பேராலயத்தில் ஆயர் தலைமையில் யாழ் மறைமாவட்டத்தில் இயங்கும் கத்தோலிக்க பாடசாலை அதிபர்களாகப் பணிபுரியும் குருக்கள் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். இத்திருப்பலியில் யாழ் மறைமாவட்டத்திலுள்ள கத்தோலிக்க பாடசாலைகளின் அதிபர்கள, ஆசிரியர்கள் மாணவப் பிரதிநிதிகள் எனப்பலர் பங்கேற்றனர். இத்திருப்பலியின் மறையுரையினை புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர் அருட்பணி அ.றொபின்சன் அடிகளாரும், வாழ்துரையினை குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளாரும், மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் அருட்பணி வின்சன் அடிகளாரும் வழங்கினர். ஆயரின் தூரநோக்கைக் கொண்ட கல்லிப்பணி, ஆன்மீகப்பணி, கைவிடப்பட்டோர் மட்டில் அக்கறை, துறவற சபைகளின் வளர்ச்சிக்கான முன்னெடுப்புக்கள் போன்ற பல நற்பணிகள் எடுத்துரைக்கப்பட்டன. தொடர்ந்து மறைக்கல்வி பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு ஆயரினால் பதக்கங்கள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

## மாங்குளத்தில் புதிய இறைதியான இல்லம்



மாங்குளம் பங்கில் புதிதாக அமைக்கப்பட்டுவந்த இறைஇரக்க இறைதியான இல்லக் கட்டுமானப்பணிகள் நிறை வடைந்த நிலையில் அத்தியான இல்ல திறப்பு விழா கடந்த 06ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை மரியதாஸ் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் கலந்து தியான இல்லத்தை ஆசீர்வதித்துத் திறந்து வைத்து திருப்பலியைத் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். அத்து டன் தூய ஆவியார் திருவிழாவைச் சிறப்பித்து 07ஆம் திகதி இத்தியானத்தில் தூயஆவியார் திருவிழிப்பு ஆரா தனையும் இடம்பெற்றது. இத்திருவிழிப்பு ஆராதனை திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களின் தலைமையில் திருவிழிப்பு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் இறைமக்கள் பக்தியுடன் பங்குபற்றினர்.

## தாவீது அடிகளாரின் 44ஆம் ஆண்டு நினைவுநாள்




யாழ்ப்பாணம் பொதுநூலகம் சிங்கள காடையர்களால் எரிக்கப்பட்டபோது அதனைப்பார்த்து மாரடைப்பால் மரணமடைந்த அருட்தந்தை சிங்கராயர் தாவீது அவர்களின் 44ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வு கடந்த 01ஆம் திகதி பருத்தித்துறை தும்பளையில் நடை பெற்றது. பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வரும் பங்குத் தந்தையுமான அருட்தந்தை கிருபாகரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் தும்பளை புனித மரியன்னை சனசமுக நிலையத்தின் ஏற்பாட்டில் நிலைய தலைவர் திரு. ஜெயரட்ணம் கட்சன் அனோஜன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் புதிதாக அடித்தளமிடப்பட்டு கூரை அமைக்கப்பட்ட அருட்தந்தையின் உருவச்சிலை திறப்புவிழாவும் பல்வேறு பரீட்சைகளில் தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்புக்களும் நடைபெற்றன. புதிதாக அடித்தளமிடப்பட்டு ☛ 2


## குருத்துவ வெள்ளி விழா வாழ்த்துக்கள்



**அருட்பணி அன்ரன் அமலதாஸ்**

அறிவுச் சுடர் ஒளியே
அன்பான குருமணியே
பணிவுள்ள பணியாளனே
ஆண்டுகள் இருபத்தைந்து
அரும்பணி ஆற்றியவரே
நீண்டு தொடரட்டும்
நிறைவான உம் சேவை



**அருட்பணி சோதிநாதன்**

கடவுளின் பணிநிலத்தில்
கல்லும் முள்ளும் தாண்டி
கனிவோடு பணி செய்த
உன்னத பணிக்குருவே
நீளத் தொடரும் பாதைகளில்
நிறை அருள் கூடவர
வரம்வேண்டி வாழ்த்துகிறோம்



**அருட்பணி ஞானேந்திரன்**

இறைபணியியலில் உரோமையில் கற்று
பட்டங்கள் பெற்று உயர்ந்தவரே
அருள் ஆசியில் நிறைந்தவரே
கடந்து நீர் வந்திருப்பது
கடினமான பாதைகள்
தொடர்ந்தும் தூயதேவன்
துணையாய் வந்திடுவார்


ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## கடவுளின் கொடை

"என் இதயத்திற்கேற்ற மேய்ப்பர்களை உங்களுக்குக் கொடுப்பேன் அவர்கள் உங்களை அறிவுடனும் முன்மதியுடனும் வழிநடத்து வார்கள்" என்கிறார் நம் கடவுள் (எரே 3:15).

புதிய திருத்தந்தை 14-ஆம் லியோ (LEO XIV, 14-ஆம் சிங்கராயர்) இறைவன் தந்த உன்னத கொடை! மக்களின் மனங்களை உள்ளார்ந்து அறிகின்ற இறைவன், காலத்தின் அறிகுறிகளைக் கணித்துத் தந்திருக்கும் ஒப்பற்ற கொடை இவர்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மறைவுக்குப் பிறகு, புதிய திருத்தந்தையை இறைவன் நமக்கு வழங்கிட வேண்டுமெனத் திரு அவை இறைவேண்டலில் ஒன்றித்திருந்தது. புதிய திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கக் கர்தினால்களின் கூடுகைத் தொடங்கிய நாளிலிருந்து மக்கள் வெண்புகைக்காக ஆவலோடு காத்திருந்தார்கள்.

இரண்டு நாட்கள், ஏறக்குறைய 48 மணி நேரம் கடந்த வேளையில், மே மாதம் 8-ஆம் நாள் உரோமை நேரப்படி மாலை 6:08 மணிக்கு (இந்திய நேரப்படி இரவு 9:38) 'புதிய திருத்தந்தை கிடைத்துவிட்டார்' என்னும் அறிவிப்பைத் தெரியப்படுத்தும் விதமாக, சிஸ்டைன் சிற்றாலயத்திலிருந்து வெண் புகை வெளிவந்தது. பெருங்கோவிலின் மணிகள் தொடர்ந்து ஒலிக்க, மணியோசை வானவர் வாழ்த்தை இசைத்தன. பேதுரு சதுக்கத்தில் கூடியிருந்த மக்கள் கூட்டம் கரவொலி எழுப்பி ஆரவாரத்துடன் ஒன்றுகூடி, புதிய திருத்தந்தையின் திருமுகத் தரிசனத்திற்காகக் காத்திருந்தனர்.

வத்திக்கான் மேல்மாடத்தில் தோன்றிய கர்தினால் தோமினிக் மம்பார்தி அவர்கள் "Annuntio vobis gudium: Habemus Papam!" - அதாவது "நான் உங்களுக்கு ஒரு பெரும் மகிழ்ச்சியூட்டும் செய்தியை அறிவிக்கிறேன் நாம் ஒரு புதிய திருத்தந்தையைப் பெற்றி ருக்கிறோம்" என்று கூறியதுடன், "கர்தினால் இராபர்ட் பிரான்சிஸ் பிரவோஸ்ட் 267-வது திருத்தந்தையாகக் கிடைத்திருக்கிறார் அவர் 14-ஆம் லியோ என்ற பெயரிலே அழைக்கப்படுவார்" என்றும் அறி விக்கிறார். திருச்சிலுவை முன்வர, திருத்தந்தை அம்மாடத்திற்கு அழைத்து வரப்படுகிறார். மக்களின் கரவொலியும் ஆரவாரமும் விண்ணை முட்டுவதும், அவர்கள் முகங்களில் மகிழ்ச்சி பொங்கு வதும் கண்கொள்ளாக் காட்சியாகிறது!

இருகரம் உயர்த்தி மக்களை நோக்கிக் கையைசைத்து மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்ட திருத்தந்தை 'Urbi et Orbi' (ஊர்பி எத் ஓர்பி) எனும் ஊருக்கும் உலகிற்குமான ஆசிரை வழங்குகிறார். "உங்கள் அனைவருக்கும் அமைதி உண்டாகட்டும்!" என்ற ஆசிரோடு தன் உரையைத் தொடங்கிய புதிய திருத்தந்தை 14-ஆம் லியோ, "கடவுளின் மந்தையாம் மக்களுக்காகத் தனது உயிரைக் கொடுத்த நல்லாயனாம் உயிர்த்த இயேசு கிறிஸ்து கூறிய முதல் வார்த்தைகள் இவை. இந்த அமைதியின் வாழ்த்து, உங்கள் இதயங்களில் நுழைந்து உங்கள் குடும்பங்களுக்கும் உலகின் எல்லாத் திசைகளில் இருக்கும் மக்கள் அனைவருக்கும், பூமியெங்கும் சென்றடைய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்" என்றார்.

"இது உயிர்த்தெழுந்தக் கிறிஸ்துவின் அமைதி ஆயுதங்களைக் களையும் அமைதி தாழ்ச்சி மற்றும் விடாமுயற்சி உள்ள அமைதி நம் அனைவரையும் அளவின்றி அன்பு செய்யும் கடவுளிடமிருந்து வரும் அமைதி" என்று உயிர்ப்பு நாளில் அமைதியின் பரிணாமங்களை எடுத்துக் கூறிய மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை நினைவுகூர்ந்து, "அவருடைய வலு குறைந்த குரல் இன்று நம் காதுகளில் கேட்டுக் கொண்டிருக்கிறது அதே ஆசிரை நானும் இன்று உங்களுக்கு வழங்குகிறேன்" என்றும் மக்களைத் திடப்படுத்தினார்.

"கடவுள் நம்மை அன்பு செய்கிறார் நம் அனைவரையும் அன்பு செய்கிறார் தீமை வெற்றி பெறாது. நாம் அனைவரும் கடவு ளின் கைகளில் இருக்கிறோம் எனவே, பயமின்றிக் கடவுளுடன் ஒருவருக்கொருவர் கரம் கோர்த்து முன்னேறுவோம் நாம் கிறிஸ்துவின் சீடர்கள். கிறிஸ்து நம்முன் செல்கிறார் உலகத்திற்கு அவருடைய ஒளி தேவை. கடவுளையும் அவரது அன்பையும் அடைய உதவும் பாலமாக மனிதகுலத்திற்கு அவருடைய ஒளி தேவை. உரையாடல், சந்திப்பு வழியாகப் பாலங்களைக் கட்டவும், ஒரே மக்களாக அனைவரும் ஒன்றிணைந்திருக்கவும் ஒருவருக்கொருவர் உதவுவோம்" என்னும் அவருடைய செய்தி மறைந்த திருத்தந்தையின் எண்ண ஓட்டங்களையும் அவருடைய உணர்வுகளையும் பிரதிபலிப்பதாகவே அமைந்திருந்தன.

"உங்களுடன் நான் ஒரு கிறித்தவன் உங்களுக்காக ஓர் ஆயர்" என்று கூறும் அகுஸ்தினாரின் சபையைச் சார்ந்த அவரது மகன் என்று தன்னைச் சிறப்பான வகையில் அடையாளப்படுத்திக் கொண்ட புதிய திருத்தந்தையின் பிறப்பும் வாழ்வும் பணியும், அவர் தேர்ந்தெடுத்திருக்கும் புதிய பெயரும் உலகிற்கு ஆயிரம் அர்த்தங்களைச் சொல்கின்றன.

அமெரிக்க ஐக்கிய நாட்டிலே, இலினாய்ஸ் மாகாணத்தில், சிகாகோ பட்டணத்தில் பிறந்த இவர், புனித அகுஸ்தினார் துறவற சபையில் தன்னை இணைத்துக்கொண்டு குருவாக அருள்பொழிவு பெற்று, இறையழைத்தல் ஊக்குநராக, பேராசிரியராகப் பயணித்து, வழிகாட்டியாகப் பரிணமித்து, அச்சபையின் தலைவராக வழிநடத்தி, பின் பெரு நாட்டில் சிக்லாயோ மறைமாவட்ட ஆயராகப் பணியாற்றி, 2023-ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் கர்தினாலாக உயர்த்தப்பட்டார். ஆயர்களுக்கான திருப்பீடத் துறையின் தலைவராகவும், இலத்தீன் அமெரிக்காவிற்கான திருப்பீட ஆணையத்தின் தலைவராகவும் திறம்படப் பணியாற்றியவர்.

அமெரிக்க நாட்டில் வளமையான பிறப்பும், தூய அகுஸ்தினார் சபையில் பெற்ற ஆழமான ஆன்மீகமும், பெரு நாட்டில் மக்களின் வறுமை வாழ்வில் கண்ட அனுபவங்களும் இவரைப் பெரிதும் புடமிட்டிருக்கின்றன என்பது இவருடைய முதல் உரையில் எதிரொலிக்கிறது.

திருத்தந்தை 14-ஆம் லியோவின் பணிக்காலம் நம்பிக்கையாளர்களின் ஆன்மிகத்தை ஆழப்படுத்தும், திரு அவையின் செயற்பாடுகளை மேன்மைப்படுத்தும் என்றே நம்புகிறோம். இத்தகைய பணிகளை முன்னெடுத்துச் செல்ல நமது இறைவேண்டல் அவருக்கு அன்றாடம் அவசியமாகிறது.

**அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்**

---

## உயிர்த்த ஆண்டவர் சமூகத்தின் இயக்குநர் சகோ. லலித் பெரேரா தலைமையில்

# "புதுப்பித்தலின் நாள்" – ஆவியின் வழிபாடு

தூய ஆவியின் பெருவிழாவை முன்னிட்டு யாழ் மறைமாவட்ட ஆயர், குருக்களின் வழிநடத்தலின் கீழ், யாழ்ப்பாணம், புனித மரியாள் பேராலயத்தில், வரும் ஆனி மாதம் 28ம் திகதி சனிக்கிழமையன்று காலை 9.30 முதல் மாலை 4.00 வரை உயிர்த்த ஆண்டவர் சமூகத்தின் நிறுவுனர் / இயக்குநர் சகோ.லலித் பெரேரா தலைமையில் "ஓ தூய ஆவியே! ஆராதனையின் இதயத்தினூடாக எங்கள் இறை உரிமைப்பேற்றுக்குள் எங்களை வழிநடத்தும்." என்னும் கருப்பொருளில் "புதுப்பித்தலின் நாள்" நடைபெறவுள்ளது.

தூய ஆவியில் நாங்கள் மேலும் புதுப்பெலனும் புதிய ஆற்றலும் பெற்று தூய ஆவியினால் எங்கள் உள்ளங்களையும் வாழ்வையும் புதுப்பித்து, எம் ஒவ்வொருவரின் வாழ்வியலையும் புதிதாக மாறச் செய்யும் ஒரு உன்னத இறை அனுபவத்திற்குள்ளாக எங்களை அழைத்துச் செல்லும் இந்த நிகழ்விற்கு உங்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

உயிர்த்த ஆண்டவர் சமூகம், இலங்கை கதோத்தோலிக்க ஆயர் சங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டு ஆயர்களின் மேற்பார்வையிலும், தொடர்ச்சியான வழி நடத்தலிலும் 40 வருடங்களை கடந்து தூய ஆவியின் பெந்தகோஸ்தே அனுபவத்தை எமது நாளாந்த வாழ்வாக்கிட அவரில் நாம் என்றும் இறை உறவிலும் இறை உரிமைப் பேற்றிலும் முன்னேறித் திளைத்திட ஆண்டவரின் நற்செய்தியை ஆண்டவர் பணித்தவாறே உலகமமெங்கி லும் அறிவிக்கும் பணியை செய்து வருகின்றது. இலங்கையில் தொடங்கிய நற்செய்திப் பணி உலகமெங் கும் 6 நாடுகளில் பரவி இறை மகிமை சேர்த்து வருகிறது.


தமிழ் மொழியில் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமைகளிலும் பரிந்துரை செபமும் ZOOM மூலமாக online இல் மாலை 7 மணி முதல் நடைபெற்று வருகின்றது, மேலும் மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மறை மாவட்டங்களில் மாதாந்தம் புகழ்ச்சி ஆராதனைகளும் குணமாக்கல் வழிபாடுகளும் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதுடன் ஏனைய இடங்களில் தமிழ் மற்றும் இதர மொழிகளில் வாராந்த மற்றும் மாதாந்த புகழ்ச்சி ஆராதனைகள் மற்றும் நற் செய்தி பகிர்வுகள் தொடர்ச்சியாக நடைபெற்றுவருகின்றது.

இவ்வருடம் பங்குனி மாதம் முதலாம் மற்றும் இரண்டாம் திகதிகளில் நான்கு படிமுறை ஞான ஒடுக்கம் யாழ், மானிப்பாய், புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது. இரண்டு நாட்களிலும் ஆயிரம் பேர் வரை கலந்து கொண்டு வாழ்வியல் மாற்ற அனுபவம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

மேலதிக விபரங்களுக்கும் போக்குவரத்து ஒழுங்குகளுக்கும் (தனிப்பட்ட/பங்குரீதியான) 077 003 1546 ; 077 248 1598 ; www.risenlordcommunity40thanniversary.org

---

## "நெஞ்சே நினை" மூன்றாம் பதிப்பு வெளிவந்துள்ளது




**சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளாரின் பிறப்பின் நூற்று ஐம்பதாவது ஆண்டு நினைவில் இளவாலையூர் வித்துவான் ச.அடைக்கலமுத்து (அமுது) அவர்கள் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் வகையில் எழுதப்பட்ட 'நெஞ்சே நினை' என்னும் நூல், பாதுகாவலன் வெளியீடாக மூன்றாம் பதிப்பாக வெளிவந்துள்ளது.**

**216 பக்கங்களைக் கொண்ட இந்நூல் மாணவர்களின் நலன் கருதி சகாய விலையில் ரூபா 150/= இற்கு புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

---

## ஒரே தந்தையின் குழந்தைகளாக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

**நமக்குள் எல்லைகளைத் திறக்கும் தூய ஆவியார்**

நமது வாழ்க்கையை அன்பிற்குத் திறக்கும் கொடையாக தூய ஆவியானவர் முதலில் நமக்குள் எல்லைகளைத் திறக்கிறார் என்றும், கடவுளின் இத்தகைய பிரசன்னத்தின் முன் நமது கடினமான தன்மை, மூடத்தனம், தன்னலம், நமது தடையாகிய அச்சங்கள், தன்னைப்பற்றி மட்டுமே சிந்திக்கும் சுய அன்பு ஆகியவை உருக்குகின்றது என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை 14-ஆம் லியோ.

தன்னலத்தால் உறிஞ்சப்பட்டு, அழிந்து போகும் வாழ்க்கையின் அபத்தை சவால் செய்ய தூய ஆவியானவர் நமக்குள் வருகிறார் என்றும், சமூகமயமாக்கலுக்கான வாய்ப்புகள் பெருகி வரும் உலகில், அதனுடன் நாம் இணைக்கப்பட்டிருந்தாலும், அதற்கு முரண்பாடாக கூட்டத்தில் இருந்தாலும் தனிமையான பயணிகளாக, இணைப்பின் வலைகளை உருவாக்க முடியாதவர்களாக நாம் இருக்கின்றோம் என்றும், கூறினார் திருத்தந்தை.

கடவுளின் தூய ஆவியார், வாழ்க்கையைப் பார்ப்பதற்கும் வாழ்வதற்கும் ஒரு புதிய வழியைக் கண்டறிய நமக்கு உதவுகிறார் என்றும் நாம் அணியும் முகமூடிகளுக்கு அப்பால் நம்மைச் சந்திப்பதற்கு நம்மைத் திறக்கிறார் என்றும் எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், தூய ஆவியார் கடவுளைச் சந்திக்க நம்மை வழிநடத்துகின்றார், அவருடைய மகிழ்ச்சியை அனுபவிக்க நமக்குக் கற்பிக்கிறார் என்றும் கூறினார்.

இயேசுவின் வார்த்தைகளில், அவரது அன்பில் நாம் நிலைத்திருந்தால் மட்டுமே அவருடைய வார்த்தையைக் கடைப்பிடிப்பதற்கான பலத்தைப் பெறுவோம் என்றும் சுட்டிக்காட்டிய திருத்தந்தை அவர்கள், அவர் நமக்குள் எல்லைகளைத் திறக்கிறார், இதனால் நம் வாழ்க்கை வரவேற்கத்தக்க இடமாக மாறுகின்றது என்றும் கூறினார்.

**நம் உறவுகளில் எல்லைகளைத் திறக்கும் தூய ஆவியார்.**

தூய ஆவியார் நமது உறவுகளில் எல்லைகளைத் திறக்கின்றார் இந்தக் கொடையானது, நமக்குள் வாழும் அவருக்கும் தந்தைக்கும் இடையிலான அன்பு என இயேசு கூறுகிறார் என்று கூறிய திருத்தந்தை அவர்கள், கடவுளின் அன்பு நம்மில் இருக்கும்போது, சகோதர சகோதரிகளுக்கு நம் இதயங்களைத் திறக்கவும், நம் கடினத்தன்மையை வெல்லவும், அச்சத்தை வெல்லவும், நமக்குள் கிளறும் உணர்வுகளைப் பயிற்றுவிக்கவும் நாம் திறன் பெறுகிறோம் என்றும் மொழிந்தார்.

திருஅவையின் உறுதியான அளவுகோலான மற்றவர்களுடனான நமது உறவுகளின் எல்லைகளை விரிவுபடுத்துதல், உடன்பிறந்த உணர்வின் மகிழ்ச்சியைப்பெறுதல் ஆகியவற்றிற்காகத்தூய ஆவியானவர் நம் உள்ளங்களைத் திறக்கிறார் என்றும், எல்லைகள் அல்லது பிளவுகள் இல்லாது, திருஅவையில் ஒருவருக்கொருவர் உரையாடி வரவேற்று, நமது வேறுபாடுகளை ஒருங்கிணைத்து, ஒரே திரு அவையாக அனைவரையும் வரவேற்று விருந்தோம்பும் இடமாக மாறினால் மட்டுமே நாம் உண்மையிலேயே உயிர்த்தெழுந்தவரின் திருஅவையாகவும், பெந்தக்கோஸ்து சீடர்களாகவும் இருக்கிறோம் என்றும் தெளிவுபடுத்தினார் திருத்தந்தை.

---

## தாவீது அடிகளாரின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூரை அமைக்கப்பட்ட அருட்தந்தையின் உருவச்சிலையை அருட்தந்தை கிருபாகரன் அவர்கள் திறந்துவைத்தார். தொடர்ந்து அருட்தந்தையின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள்

இடம்பெற்றதுடன் 2024ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள், 2023 கா.பொ.த சாதாரணதர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள் மற்றும் மறையறிவு போட்டி, கட்டுரை போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பும் நடைபெற்றன.

1981ஆண்டு மே மாதம் 31 திகதி இரவு-நேரத்தில் தமிழர் பிரதேசங்களில் இடம்பெற்ற வன்முறைகளின் போது யாழ்ப்பாண நகரில் உள்ள முக்கிய சந்தை, வணிக நிறுவனங்கள், ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம், யாழ்ப்பாணப் பொது நூலகம், ஆகியன சிங்கள காடையர்களால் முற்றாக எரியூட்டு அழிக்கப்பட்டன. இம்மாபெரும் துயர நிகழ்வு 20ம் நூற்றாண்டின் இன, கலாச்சார அழிப்புகளின் ஒரு மிகப்பெரும் வன்முறையாகக் கருதப்படுகிறது.

இவ்வழிப்பு இடம்பெற்ற காலத்தில் யாழ்ப்பாணப் பொது நூலகம் 97,000 வரையான அரிய நூல்களுடன் தென்கிழக்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகமாகத் திகழ்ந்ததுடன் இந்நூலகம் எரிக்கப்பட்டது ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் அழியாக் காயம் ஒன்றை ஏற்படுத்தி, தமிழ்த் தேசியப் போக்குக்கு உரம் ஊட்டியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.



# நம்பிக்கை பிறந்துள்ளது

அன்று வியாழக்கிழமை, வைகாசித் திங்கள் எட்டாம் நாள், இரவு (எங்கள் நேரம்) ஒரு பத்து மணி போல் எனது கையடக்கத் தொலை பேசியில் வட்ஸ் அப் பார்த்தேன். யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் ஒரு பதிவு போட்டிருந்தார். வத்திக்கானில் வெண்புகை! அதிசயம்! 133 கருதினால்மார் அடுத்த திருத்தந்தையைத் தெரிவு செய்ய மூடப்பட்ட மண்டபத்தில் தங்களை மறைத்துக் கொண்டு இரண்டு நாட்கள் கூட ஆகவில்லையே! இவ்வளவு விரைவாக வெண்புகையென்றால் நல்ல செய்தியாகவே இருக்கும். ஆவலுடன் சிஎன்என் (CNN- Cable News Net Work) தொலைக் காட்சியை நாடினேன். வெண்புகை வந்து கொண்டே இருந்தது.

### ஒன்றுகூட்டிய ஓர் எதிர்பார்ப்பு

வத்திக்கான் புனித பீற்றர் சதுக்கத்தில் இலட்சக் கணக்கான மக்கள் ஒன்றுகூடி நின்றார்கள். பல்வேறு நாடுகளில் இருந்து வந்தவர்கள். இவர்களையெல்லாம் ஒன்றுகூட்டி வைத்தது ஓர் எதிர்பார்ப்பு. அவர்கள் அனைவருமே ஒரே திசையில் பார்த்துக் கொண்டிருந்தார்கள். புனித பீற்றர் பேராலயத்தின் இடது பக்கமாக ஒரு பல்கனி உண்டு. கதவுகள் பூட்டியிருந்தன. திரைச் சீலைக்கதவுகளை மூடிய வண்ணம் இருந்தது. எதிர்பார்ப்பை அதிகரித்தது.

இப்படிப்பட்ட வேளைகளில் இந்த இடைவெளியை நிரப்பவும் மக்களின் எதிர்பார்ப்பைத் தூண்டுவதுமாக வர்ணனையாளர்களை அழைத்து. அதிலும் குறிப்பாக இவ்விடயங்களை அறிந்தவர்கள், வத்திக்கான் பார்வையாளர்களைப் பேசவைப்பதுவும், அவர்களைப் பேட்டி காண்பதுவும் தொலைக் காட்சி நிறுவனங்களின் ஒரு பழக்கம்.

இவர்களும் பல்வேறு விடயங்களைப் பற்றிப் பேசுவார்கள். சில பொருத்தமாக இருக்கும், பல பொருத்த மற்றவையாகவும் இருக்கும். இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த வேளை, என்னுள் ஓர் எண்ணம் தோன்றியது. ஒரு திருத்தந்தையின் தேர்வை ஒட்டிய விடயங்களை ஒலி - ஒளி பரப்புவதில் BBC (British Broadcasting Corporation) நன்றாக இருக்கும். அதிலும் குறிப்பாக இலண்டனில் வாழ்ந்து வரும் ஒஸ்ரன் ஐவெறிக் அவர்களை நிச்சயமாக பிபிசி அழைத்திருக்கும் இவர், ஒரு நீண்ட கால வத்திக்கான் அவதானி. போப் பிரான்சிஸ் அவர்களைப் பற்றியும், அவருடன் நடத்திய உரையாடல்களையும் நிறைய எழுதியவர். அவருடைய நூல்கள். கட்டுரைகள் பலவற்றை நான் படித்துள்ளேன். ஒரு நம்பகரமான ஆதாரம், இவர் ஆகவே, சி.என்.என்.இல் இருந்து பி.பி.சி. இற்கு மாறியேன். நான் எதிர்பார்த்தது பொய்க்கவில்லை.

### முன்நிலையில் நின்றவர்கள்

வெண்புகை வர ஆரம்பித்துக் கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலமாயிற்று. வழமைக்கு மாறான ஒரு நிகழ்வு. என்னுள் ஓர் இனந்தெரியாத ஏக்கம். யாரைத் தெரிவு செய்தார்களோ! அண்மைக் காலமாக அடுத்த திருத்தந்தை யார் என்று பலரும் பலவாறு பேசி வந்தார்கள். எழுதி வந்தார்கள். ஐவரின் பெயர்கள் முன்னிலையில் நின்றன. பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த ராகிளே இத்தாலியைச் சேர்ந்த பரிளின் பியற்றோ, வட அமெரிக்காவைச் சேர்ந்த றொபேர்ட் பிரான்சிஸ் பிறவொஸ்ற் நான் மேலே குறிப்பிட்ட மூன்றாவது கருதினாலை வடஅமெரிக்காவில் இருந்து வெளிவரும் ஒரு கத்தோலிக்க வார ஏடு (NCR) இவரை முன்னுக்கு வைத்தது. ஆனால் ஐரோப்பிய ஆசிய ஊடகங்கள் இவரைப் பற்றிப் பெரிதாகப் பேசவில்லை.

இவர்கள் மூன்று பேருமே போப் பிரான்சிஸ் அவர்களுக்கு வேண்டியவர்கள் நெருக்கமானவர்கள். அவருடைய சீர்திருத்தங்களை ஏற்றுக் கொண்டவர்கள். அவற்றிற்கு ஆதரவு தந்தவர்கள். அந்தப் புரட்சிப் பாதையைத் தொடரக்கூடியவர்கள்.

### எதிர்வுகூறு

இலண்டனில் இருந்து வெளிவரும் வார சஞ்சிகை Tablet இல் படித்த ஞாபகம். ஒருமுறை போப் பிரான்சிஸ் உரோமில் இருக்கும் யேசு சபைத் தலைமைச் செயலகம் சென்றார். அங்கு அவர் கோப்பி இயந்திரத்தில் கோப்பி எடுத்துக் கொண்டிருக்கும் நேரம் (அவரது எளிமையின் ஒரு வெளிப்பாடு), ஒரு யேசு சபை மாணவன் அவரை அண்டி, "போப் பிரான்சிஸ் நீங்கள் ஒரு பாரிய சீர்திருத்தத்தை திரு அவையில் கொண்டுவர முயற்சிக்கிறீர்கள். ஆனால் உங்கள் காலத்தின் பின்னர் இந்தச் சீர்திருத்தம் தொடருமா?" போப் பிரான்சிஸ் அவர்களுடைய பதில் எனது மனதில் அன்றே பதிந்து விட்டது. "பல கருதினால்மாரை நான் நியமித்துள்ளேன். அவர்களில் எனக்கு நம்பிக்கை உண்டு" ஆகவே எனது எதிர்பார்ப்பு அவரது சீர்திருத்தங்களைத் தொடரும் ஒருவர்தான் அடுத்த திருத்தந்தையாகத் தெரிவு செய்யப்படுவார் என்று சொல்லாமல் சொன்னார். ஆனால் இந்த ஆனாலில்தான் பிரச்சினையே உண்டு.

### இரங்கற் காலம்

போப் பிரான்சிஸ் உயிர்த்த கிறிஸ்துவோடு உயிர்த்த பின்னர் (உயிர்ப்புவிழா வின் மறுநாள் அவர் இறைவனடி சென்றார்) அவரது இறப்பிற்கு வருந்துவோர் ஒன்பது நாட்களை இரங்கல் காலமாகப் பேணினார்கள். இந்நாட்களில் அவருக்கு திருவழிபாடுகள் நிறைவேற்றப்பட்டன. என்னைப் பொறுத்த மட்டில் நான் அவரை இழக்கவில்லை. எனது வாழ்க்கைப் பயணத்தை உறுதி செய்தவர் போப் பிரான்சிஸ். பல்வேறு தருணங்களில் எனது மொழி பேசியவர். அவரது சீர்திருத்தப் பணி என்னை - எனது சிந்தனையை ஊர்ஜிதப்படுத்தியது. பல தருணங்களில் என்னில் இருந்து அவரைப் பேசவிட்டேன். அவருக்காக இறைவனுக்கு நன்றி கூறினேன். அவர் செய்த சீர்திருத்தங்கள் என்னில் சாகா வளரும்.

### பண்பிழந்த விமர்சனங்கள்

இந்த இரங்கல் காலத்தை கருதினார்மார் வேறுவகையிலும் பயன்படுத்தினர். கருதினால்மாருக்கு வேறுபல கருதினார்மாரைத் தெரியாது. ஆகவே அடுத்த திருத் தந்தையைத் தெரிவு செய்யும் முன்னர் ஒருவரை ஒருவர் அறிவது அவசியம். ஆகவே, சிறு குழுக்களாக ஒருவரை ஒருவர் சந்தித்தார்கள். ஒருவரை ஒருவர் அறிய முயன்றார்கள். இதெல்லாம் நல்லவை. ஆனால் இனித்தான் வருகின்றது... அந்த ஆனால்...

வட அமெரிக்கக் கருதினால் பேர்க் இச்சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயன்றார். போப் பிரான்சிஸ் அவர்களைக் கடுமையாக விமர்சித்தார். பாரம்பரியத்தைக் காப்பற்றவில்லை என்று குற்றம் சாடினார். திருஅவையை அழிவுப் பாதையில் கொண்டு சென்றார் என்று முதலைக் கண்ணீர் வடித்தார். இவரோடு கருதினால் சாறா போன்றோரும் தாங்கள் தான் திருஅவையின் காவலர்கள் என்றார்கள். இத்தாலி ஊடகங்களை அழைத்து தங்கள் அபிப்பிராயங்களைத் திருஅவையின் படிப்பினை என்று சொல்லாமல் சொல்லி அழாமல் அழுதார்கள். இது வழமைக்கு மாறான பண்பற்ற செயல்.

**கரவையூர்ச் செல்வம்**

இவர்களது விமர்சனங்களும் இவர்களது கூற்றுக்களும் அடுத்த திருத்தந்தையைத் தெரிவு செய்வோரை குழப்புமா என்றொரு கேள்வி உரக்கக் கேட்கப்பட்டது. குழம்பின குட்டையில் இந்த விமர்சகர்கள் மீன்பிடிப்பார்களா? என்றுமொரு கேள்வியும் எழுந்தது. என்போன்றோருக்கு இது ஒரு பயத்தை ஏற்படுத்தியது. பயம் என்று சொல்வதை விட தயக்கம் என்று சொல்வது பொருத்தம். இவர்கள் சொல்லிய கருத்துக்கள், இவர்கள் தங்கள் கருத்தைச் சொல்லிய முறைகள், சற்றுப் பண்புக் குறைவாகவே காணப்பட்டது. அதுவே இவர்களுக்கு எதிராக மாறுமா என்று விமர்சித்தவர்களும் உண்டு.

### Hablmns Papam

பலகணிக் கதவு திறந்தது. கருதினால் ஒருவர் வந்து habemus papam என்றார். அதாவது திருத்தந்தை ஒருவர் எங்களுக்குக் கிடைத்து விட்டார். பெயரையும் சொன்னார். தெரிவு செய்யப்பட்ட புதிய திருத்தந்தை அவர்கள் திருத்தந்தையின் உடையில் காட்சி தந்தார். மக்களைப் பார்த்தவண்ணமே நின்றார். வெகு நேரமாக அதையாக நின்றார். இடையிடையே தனது கரங்களை உயர்த்தி மக்களின் ஆரவாரத்தையும், மகிழ்ச்சியையும் கரகோஷத்தையும் ஏற்பது போலத் தானும் கரங்களை அசைத்தாலும் அமைதி குலையாது நின்றார். நானும் அவரை உன்னிப்பாகப் பார்த்தேன். அவரது அமைதியான அந்த நிலை பேசியது. மௌனம் பேசும். ஓர் எளிமை தோன்றியது. ஓர் ஆழம் தெரிந்தது. "என்னை எனக்குத் தெரியுமென்ற ஒரு தோற்றம் எனது பாதை எதுவென்ற தெளிவின் தோற்றம்.

புதிய திருத்தந்தை பல்கனியில் தோன்றியபொழுது சிவப்பு நிற மேலங்கியையும் பதினாறாம் பெனடிக்ற் அணிந்த வேலைப்பாடுகளுடன் அகன்ற ஒரு ஸ்ரோவையும் அணிந்திருந்தார். வியப்புற்றேன். என்ன இந்தக் கோலம்! பதினாறாம் பெனடிக்ற் அவருடைய பாதையில் தான் பயணிப்பேன் என்று சொல்லாமல் சொல்லுகிறாரா?" பழமை விரும்பிகள், திருஅவையை பின்னிழுப்போருக்கு ஒரே "குஷி" போப் பிரான்சிஸ் அவருடைய சீர்திருத்தப் பாதையில் திருஅவை நடக்கவேண்டுமென்று நினைப்போருக்கு ஒரு தயக்கம். இவர்களில் நானும் ஒருவன்.

### தெளிந்த தயக்கம்

புதிய திருத்தந்தையின் முதல் வசனம். முதல் வாழ்த்து "ஆண்டவருடைய சமாதானம் (சாந்தி) உங்களோடு இருப்பதாக"- உயித்த கிறிஸ்து தனது சீடர்களுக்குச் சொல்லிய அதே வார்த்தைகள் பிரிவினை வளர்க்கும் உலகில், போர்களைத் தொடுக்கும் நாடுகளிடையே, உலக மக்களிடையே சமாதானத்தைக் கொண்டு வருவதுதான் எனது பணி யென்றாரா?

எங்கள் மனங்களில் அமைதி இருக்குமானால் மக்களிடையே உறவுகள் வளரும். அனைத்து மக்களையும் உள்வாங்கும் பக்குவம் வளரும். மக்கள் இடையே இனங்களிடையே நாடுகளிடையே "பாலங்களைக் கட்டுவோம்"என்று தனது கன்னி யுரையிலேயே எடுத்துரைத்தார். இவரது சொந்த நாடாகிய வட அமெரிக்காவின் இன்றைய சனாதிபதி டொனல்ட் ரம்பிற்கு விடுக்கப் பட்ட சவால், இது போப் பிரான்சிஸ் அவர்களுடைய வார்த்தைகள் எதி ரொலித்தன. எங்கள் தயக்கம் தெரிந் தது. உடையில் பழமை, உரையில் புதுமை. (வளரும்)





# மூவொரு கடவுளால் அழைத்து அனுப்பப்படும் திரு அவை

கூட்டியக்கத் திரு அவையின் ஊற்றும் உயர் . மாதிரியும் மூவொரு கடவுளே. ஏனெனில், அது இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் குறிப்பிடுவதுபோல "தந்தை, மகன், தூய ஆவியாரின் ஒன்றிப்பின் ஆற்றலால் ஒன்றுகூட்டப்பெற்ற மக்கள் குலம்" (திரு அவை 4). மானிடரைச் சந்திக்க வரும் கடவுளின் மூவொருமையின் இயக்க ஆற்றல் "நான்" என்பதிலிருந்து "நாம்" எனும் உளப்பாங்கிற்கும் உறவு ஒன்றிப்பிற்கும் நம்மைக் கொண்டுவந்து, உல கிற்கு இறையாட்சிப் பணியாற்றத் திரு அவையை இட்டுச்செல்கிறது.

திரு அவையின் கூட்டொருங்கிய கக்கப் பயணம் இறை யாட்சியை நோக்கி யதே. அப்பணியை ஆற்ற அதற்கு இன்றியமையாதது கிறித்தவக் குழுமங்களின் புதுப்பித்தல். இறையருளின் முதன்மையை நாம் அறிந்து ஏற்றுக் கொண்டால்தான் அப்புதுப்பித்தல் நிகழ முடியும். "அருள்வாழ்வுசார் அடித்தளமின்றிக் கூட்டியக்கத்தன்மை மேலோட்டமானதாகவே இருக்கும்" (Km* 2c). அந்த அருள் அனுபவம் குழும இயக்கமாகச் செயலாக்கம் பெறும். அது மட்டுமின்றி, அக்குழும ஆளாள் உறவு அனுபவமே இறைச் சந்திப்பின் ஒரு தளமாகவும் வகையாகவும் திகழ முடியும். தூய ஆவியாரில் நிகழும் இந்த உறவாடலும் உரையாடலும் "ஆவியார் திரு அவைகளுக்குச் சொல்வதைத் தெளிந்து தேர்ந்திட உதவும் உண்மையான செவிமடுத்தலுக்கு வழி வகுக்கும்" (Km 2d). இவ்வாறு இந்த உறவாடலும் உரையாடலும் மனமாற்றத்திற்கான தூண்டுதலையும் தரும். (Km) மாமன்ற முதல் அமர்வின் அறிக்கையையும், (,m) இறுதி அறிக் கையையும் குறிக்கின்றன.

### திரு அவையின் கூட்டியக்கத்தின் நோக்கம்

நற்செய்திப் பணி என்பதால் கிறித்தவக் குழுமங்கள் பிற சமயத்தார். மாறுபட்ட சிந்தனைகள் மற்றும் பண்பாடுகள் என்பவற்றுடனும் கூட்டுத் தோழ மையை ஏற்படுத்துவது அவசியம்.

(தொடர்ச்சி 7ம் பக்)

# நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் பல்துறை ஆளுமைப் பணிகள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**தலைமகளும் தாயுள்ளமும்**

மற்றுமோர் சம்பவத்தில் இவருக்குத் துணையாக அனுப்பப்பட்ட அருட்பணி. ரி.ஜே.ஏ. மதுரநாயகம் அடிகள், அவ்வூர் மக்களின் சண்டை பிடிக்கும் மனநிலையையும் தூஷண வார்த்தைகளையும் சகிக்காமல் வேறிடஞ்செல்லும் முகமாக ஞானப்பிரகாசர் சுவாமியிடம் முறையிட்டார். அப்போது சுவாமியவர்கள் அடிகளாரை உற்றுப் பார்த்து, "பிள்ளை பெற்ற வருத்தம் பெற்றவளுக்கல்லவா தெரியும். உனக்கு எப்படித் தெரியும்?" என்று கண்டிப்பாகச் சொன்னார். இவ்வாறு ஒடுக்கப்பட்டோரில் அவர் கொண்டிருந்த தாயுள்ளம் வெளிப்பட்டது.

**யூலனூர்க் குடியேற்றமும் தூரநோக்கும்**

ஒடுக்கப்பட்டோர் குடியிருக்க நிலங்களை வாங்கிக் குடியேற்றங்களை நிறுவினார். போயிட்டிக்கு அருகில் ஓர் ஊரையே வாங்கிக் கோயில் கட்டிக் குடியேற்றமும் நிறுவினார். சுவாமி ஞானப்பிரகாசரின் எண்ணத்தில் உதித்துச் செயற்படுத்தப்பட்ட வட பகுதியின் முதல் குடியேற்றம் இதுவாகும். அன்றைய காலத்தில் இவருக்குப் பேராதரவாயிருந்ததோடு நிதியுதவி யும் செய்த யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்பணி. கலாநிதி கென்றி யூலன் பெயரால் இவ்வூருக்கு 'யூலனூர்' என்று பெயரிட்டார். புனித கென்றி(யரசரி)யின் பெயரால் அங்கு இவர் அமைத்த சிற்றாலயத்திற்கான மரங்கள், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மண்டபத்திலிருந்து அருட்பணி. மத்தியூஸ் அடிகளால் தரப்பட்டு அவராலேயே வடிவமைக்கப்பட்டு வழங்கப்பட்டன.

அந்த நாட்களிலே எந்தவொரு கத்தோலிக்க குடும்பமும் இல்லாத, கலடு என்று எண்ணப்பட்ட நிலத்தில் ஒரு காணித் துண்டை வாங்கி நவக்கிரி என்னும் அந்த இடத்தில் கோவில் கட்டினார். இது ஒரு வீண் வேலையென்று அன்று யாராவது எண்ணியிருக்கக்கூடும். அவரது பதில் "வரகை விதைத்து விடுவார்கள். அது முளைத்துக் காய்ந்து கருகிப் போயிருக்கும். மழை பெய்தவுடன் செழித்து வளர்ந்து பலன் கொடுப்பதைக் காணவில்லையோ? இப்போது நாங்கள் செய்யும் வேலைகள் காலம் வரும்போது நல்ல பலன் கொடுப்பதைக் காணலாம்" ஆக இருந்தது. அவ்வாறே இப்பொழுது நவக்கிரியில் இந்துக்கள் மத்தியில் பல கத்தோலிக்க குடும்பங்கள் வாழ்கின்றதோடு கலட்டு நிலமும் நல்ல பயிர்ச் செய்கை நிலமாக மாறிப் பயனளிக்கிறது. இதுவே அவரது தூரநோக்கிற்கோர் நல்ல எடுத்துக்காட்டாகும்.

**புன்னாலைக்கட்டுவன் மறைப்பணி ஆரம்பம்**

1924 அவரது பங்குப்பதிவேடு மற்றும் நாட்குறிப்பேட்டின்படி பின்வரும் விடயங்களைத் தருகின்றேன். "தின்னவேலியில் சிறிது ஓய்வெடுத்ததன் பின்பு கொழும்புத்துறை மடத்தின் கல்வியாளர்களுக்கு, கொழும்புத்துறையில் வெள்ளிக்கிழமைகளில் தொடர் விரிவுரைகள் வழங்கிக்கொண்டிருந்தேன். பெப்ரவரி 15இல் கொழும்புத்துறைக்குப் போகப் புறப்பட்டபோது சுன்னாகம் எவறிஸ்ரஸ் சின்னப்புவால் அழைத்து வரப்பட்ட புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த குடும்பங்கள் என்னைச் சந்தித்தனர். 20 குடும்பங்கள் கத்தோலிக்கர்களாக மாற இருக்கின்றனர் என்று சொன்னார்கள் (என்னிடம் வந்த முருகனும் குட்டியனும் யூலனூரில் இருந்து திருச்சபையில் சேரத் தூண்டப்பட்ட, இறந்து போன ஒருவரின் மகன்கள் என்று பின்னர் அறிந்து கொண்டேன். நான் அடிக்கடி பலாலி றோட்டில் சந்திக்கின்ற இந்தப் பரிதாபத்திற்குரிய மிருகத்தனமான படைப்புக்கள் இப்போது மனிதர்களினதும் சாத்தானினதும் அடிமைத்தனத்தில் இருந்து மீட்கப்படப் போவதை எண்ணி நான் மகிழ்வடைந்தேன். அவர்களது நிலைமையைப் பரிசோதிக்கத் தேவசகாயத்தை அனுப்புவதாக வாக்களித்தேன்."

24 பெப்ரவரி 1924 "இரண்டு நாட்களுக்கு முன்பு குட்டியனின் வளவில் கொட்டில் போடுவதற்கான பொருட்கள் அனுப்பப்பட்டன. அப்போதிருந்த இந்துக்கள் யாழ்ப்பாணம் - பலாலி றோட்டில் இருந்த பாதையை மறித்திருந்தார்கள். (சமயம் மாற இருந்தவர்கள் பெரும்பாலானவர்களை அந்த நோக்கத்தில் இருந்தும் திசைதிருப்பியிருந்தார்கள். இங்கு தின்னவேலியில் இரண்டு குடும்பங்கள் போதனை பெற்றுக் கொண்டிருந்தனர்." 25ஆம் திகதி "தின்னவேலியில் ஒரு கொட்டில் தயாரிக்கப்பட்டு அங்கு அனுப்பப்பட்டது. மடிக்கக்கூடிய பீடம் உட்பட எனது பொருட்களை ஏழாலையினூடாக அனுப்பிவிட்டு சுன்னாகம் ஊடாக நான் சைக்கிளில் புறப்பட்டேன். பிரச்சினைகளுக்கு இடங்கொடாத வகையில் அங்கு நான் இருள் சூழ்ந்தவேளையில் வந்து சேர்ந்தேன்."

26ஆம் திகதி "முடிவடையாத கொட்டிலில் 30 பேருடைய உதவியுடன் முதல் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. பாதிப்பேர் தங்கள் வீடுகளுக்கு வெள்ளாளருடைய தோட்டங்களூடாகச் செல்லவேண்டியிருந்தது. பகிரங்கமாகாமல் இருக்க விடிவதற்கு முன்பே திருப்பலியை நான் நிறைவேற்றியிருந்தேன். தோட்டங்களில் திரண்டிருந்த வெள்ளாளர் அவர்களுக்குச் சூடான வரவேற்புக் கொடுத்தார்கள். தங்கள் மனதிற்கிசைந்தபடி ஆண், பெண் என்று பாராமல் எல்லோரையும் நையப் புடைத்துப் பாதையோரங்களில் போட்டார்கள். வெளிப்படையாக அங்கு செல்லவோ, காயப்பட்டவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல, மாட்டு வண்டில் ஒழுங்கு செய்யவோ முடியவில்லை. எனவே தேவசகாயத்தைக் காவல் நிலையத்திற்குச் சைக்கிளில் அனுப்பினேன். மாலையில் இரண்டு காவல்துறையினருடன் அவர் திரும்பி வந்த வேளை காயப்பட்டவர்களைக் காவல்துறையினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர்."



**தளர்விலும் மனஉறுதி**

2 ஆம் திகதி மார்ச் மாதம் வழக்குத் தொடரப்பட்டது. "வெள்ளாளருக்கு (இணங்கிவந்து மன்னிப்புக் கேட்கச் செய்ததால்) எதிராக வழக்கை இறுக்க வேண்டாம் என்று சட்டவாளர்களுடன் இணக்கம் ஏற்பட்டு விடயம் கைவிடப்பட்டது. அதிகம் பிரச்சினைகள் இருந்ததால் சமயம் மாற இருந்த பெரும்பாலானோர் பின்வாங்கினர். இன்று தொடக்கக் குடும்பங்கள் 6 மட்டும் திரும்பி வந்ததோடு 14 குடும்பங்கள் உள்ளனர்." 1924, 30இல் திருமுழுக்குப்பெற "திரும்பிவந்த 6 குடும்பங்களும் நிலைக்கவில்லை. எட்டுக் குடும்பங்களுக்கு மட்டும் காலையும் மாலையும் போதனைகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இரவும் படங்கள் காட்டிப் போதனைகள் வழங்குகின்றேன். ஒன்பது வளர்ந்தோருக்கு இன்று திருமுழுக்கு வழங்க அருட்பணி. மத்தியூஸ் வருகின்றார்." ஏப்ரல் 4இல் "அவர்கள் போட்ட கள்ளி வேலியையும் பொருட்படுத்தாமல் விரிவுரைக்காகக் கொழும்புத்துறைக்கு தெருவால் செல்ல முடிந்தது."

6 ஆம் திகதி அருட்பணி F.M. பிசியன் தடுக்கப்பட்டமை "பதினொரு வளர்ந்தோர் தன்னுடன் திரு. மோசேஸை அழைத்து வந்த மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. பிசியனால் திருமுழுக்காட்டப்பட்டனர். சுன்னாகம் மக்கள் தொகையாக வந்திருந்தமை புதிதாக சமயம் மாறியவர்களிலே ஒரு மனப்பதிவை ஏற்படுத்தியது. நமக்காகச் சிறிது காலம் திறந்திருந்த வழியினூடாக அருட்பணி. பிசியனின் கார் வந்திருந்தது. ஆனால் சடங்கின் முடிவில் அது திரும்பிச் சென்றபோது இந்துக்கள் கள்ளிக் கொப்புகளால் தெருவுக்குச் செல்லும் பாதையை அடைத்துவிட்டுக் குழப்பம் செய்யக் காத்திருந்தனர். தடுக்கப்பட்ட அருட்பணி பிசியன் எனக்குச் சொல்லியனுப்பினார். திரு. மோசேஸ் கார் போவதற்காக மக்களுடன் சமரசம் செய்து கொண்டிருந்தார். நான் அந்த இடத்திற்கு என் ஆட்களுடன் போனபோது கால்கள் பிடரியில் அடிபடத் தெறித்தோடினர். கார் போவதற்கு நாங்கள் இடத்தை வெளியாக்கினோம். அருட்பணி. பிசியனை அரசிடம் முறையிடும்படி கேட்டுக்கொண்டேன். எனவே சில நாட்களின் பின்பு மணியகாரர் வந்து அப்பாதையைப் பொது வழியாக்கினார்." 1924, ஏப்ரல் 17இல் உரும்பிராயில் உயிர்ப்பு விழா "புன்னாலைக்கட்டுவனில் சமயம் மாறியவர்களை ஒரு குழுவாகப் பார்ப்பதற்கு பேராலயத்திற்குக் கூட்டிச் சென்றபோது எனது பயணப்பொதி உரும்பிராய்க்கு அனுப்பப்பட்டது. பெரும்பாலானவர்கள் சனி காலை வரை நகரத்தில் விடுதி எடுத்துத் தங்கவிடப்பட்டனர். நான் திருப்பலிக்கு உரும்பிராய்க்குச் சென்றேன்." எனத் தனது பங்குப்பதிவேடு மற்றும் நாட்குறிப்பேட்டில் மேற்கண்டவாறு எழுதுகின்றார்.

**தமிழ்த் தேசியவாதமும் கத்தோலிக்கமும்**

யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்கம் பரவுவதை இந்து சமயப் புத்திஜீவிகள் எதிர்ப்பதற்கு முக்கிய காரணம் தமிழ் தேசிய வாதத்தைக் கத்தோலிக்கம் மழுங்கடித்துவிடும் என்ற பயமேயாகும். இது முற்றிலும் தவறு என்பதை மிகவும் ஆதாரத்துடன் சுவாமி ஞானப்பிரகாசர் எடுத்துக் காட்டினார்.

அருட்பணி. கு. யே. அன்ரனிபாலா

## மறைப்பணி புரிந்த மாமேதை நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்

**4. கற்க கசடறக் கற்பவை**

அச்சுவேலி திண்ணைப் பள்ளியில் ஆரம்பக் கல்வியைத் தொடங்கிய (சுவாமி) ஞானப்பிரகாசர் தமது பதினொராவது வயதில் மானிப்பாய் கல்லூரியில் ஆங்கிலக் கல்வி பெறுவதற்காக "மெமோறியல்" அனுப்பப்பட்டார்.

வண. அச்சுவேலிப் இலத்தறன் சுவாமி அவர்கள் பங்குக்குருவாக இருந்த காலத்தில், சிறுவன் ஞானப்பிரகாசர் கத்தோலிக்கப் பாரம்பரியத்தில் வளர்க்கப்பட வேண்டும் என்று சிறிய தந்தையாருக்குத் திடமாகக் கூறினார். அதனால் சிறிது காலத்தில் புனித பத்திரிசியார் கல்லூயில் சிறுவன் சேர்க்கப்பட்டான். சிறந்த மாணவனாகத் திகழ்ந்து பல பரிசில்களையும் பெற்றான். வார விடுமுறை நாட்கள் என்றால் 'மானிப்பாய் தம்பி' ஞானப்பிரகாசர் தனது அன்னை அன்னமுத்துவையும், சிறிய தந்தையையும் பார்க்காமல் இருக்கமாட்டார்.

பாடசாலை தவிர்ந்த ஓய்வு நேரங்களை சங்கீதம் பாடவும், மத்தளம் அடிக்கவும், நாடகம் நடிக்கவும் ஞானப்பிரகாசர் பயன்படுத்திக் கொண்டார். சுறுசுறுப்பும், இளமைத் துடிப்பும், அறிவும், ஆற்றலும், பக்தியும், பக்குவமும் கொண்ட ஒரு வாலிபனாக அவர் உருவாகினார். சுவையான அம்சங்களை தனது இளமைப் பருவ நாட்களில் சில நகைச்சுவை கலந்து வர்ணிக்கின்றார்: "எடுத்தவுடன் பாட்டு இயற்றுகின்ற பழக்கம் தீங்குள்ளது என்பதை ஒருநாள் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாரும் நன்றாய்க் கையிலும் மனதிலும் பதிய எனக்குப் படிப்பித்தார். தற்காலம் வட்டுக்கோட்டைக் கல்லூரியில் இருக்கிறவர் என்னோகூட ஒரு வகுப்பில் மாணவராய் மானிப்பாயில் படித்தவர். இவரும் நானும் சிலநாள், சிநேகிதராய் இருந்தோம். பின் கடுஞ்சிநேகம் பகை காட்ட அவர் என்னைப் பேசிப் போட்டார். நான் வகுப்பிலிருந்து கொண்டுதானே அவரது செயலைக் கண்டித்து ஒரு பாட்டெழுதி நீட்டினேன். அவர் கோபித்துக்கொண்டு மாரிமுத்து உபாத்தியாயரிடம் அதைக் கொடுக்க அவர், வகுப்பு நேரம் செய்யும் வேலை இதுதானா? எனச் சினந்து கையை நீட்டச் சொல்லி பிரம்பினால் ஓரடி தந்தார். அவ்வடி எனது விசித்திர வேலைப்பாடுள்ள மோதிரம் தெறித்துப்போகச் செய்துவிட்டது."

**5. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு**

புனித பத்திரிசியார் கல்லூரியில் படிப்பை முடித்துக்கொண்டு தமது மாமனாரின் அழைப்பை ஏற்று பதினெட்டாவது (18) வயதில் நுவரேலியாவிலுள்ள நானுஓயாவில் பெருந்தோட்டக் கணக்காளருக்கு உதவியாகக் கடமை ஏற்க ஞானப்பிரகாசர் புறப்பட்டார்.

ஓய்வு நேரங்களில் தனியாகச் சென்று செபம் செய்வார். இக்காலத்தில் இலங்கைப் புகையிரதப் பகுதி நேர எழுதுவினைஞர் பதவிக்கான பரீட்சைக்குத் தோற்றி முதல்தரத்தில் சித்தியும் பெற்றார். இது 1893 ஆம் ஆண்டில் இடம்பெற்றது. ஒரு மாதப் பயிற்சியின் பின்பு கண்டியிலுள்ள கடகமுவ என்ற புகையிரத நிலையத்தில் குறிபொறிப்பாளராகச் சேர்ந்து தன் கடமையைக் கண்ணுங் கருத்துமாகச் செய்து வந்தார்.

இவரது ஆற்றலைக் கண்ட மேலதிகாரிகள் ஒருவருட சேவையுடன்1894ஆம் ஆண்டு இலங்கை புகையிரத தலைமைச் செயலகத்தில் பணிபுரிய அழைத்தனர். கடமையில் கவனமும், கண்ணியமான செயல்களும், கட்டுப்பாடான நடத்தையும் இளைஞன் ஞானப்பிரகாசரை சிறந்த ஆளுமையுடையவராக மாற்றின. இளைஞன் ஞானப்பிரகாசர் இறைபற்றும், பணியார்வமும், சேவை மனமும் கொண்டிருந்தாலும் தான் குருவாக வரவேண்டுமென்று இறுதிவரை எண்ணவில்லை.

எனினும் இறைவனுக்குப் பணிபுரிய வேண்டும், இறைமக்களுக்குத் தொண்டு செய்யவேண்டும், திருச்சபைக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற புனிதமான எண்ணம் ஞானப்பிரகாசரின் உள்ளத்தில் இருந்தது. இதனை உணர்ந்துகொண்ட அந்தோனி சுவாமியார், யாழ். மாட்டீனார் குருமட அதிபர் யூல்ஸ் கொலின் அடிகளாருக்குத் தமது எண்ணத்தை வெளிப்படுத்தினார். யூல்ஸ் கொலின் அடிகள் கடிதம் மூலம் தொடர்பு கொண்டும், நேரடியாகப் பேசியும் பலன் கிட்டவில்லை. இருப்பினும் அடிகள் கொழும்பு பொரளையிலிருந்த தமது சகோதரன் சாள்ஸ் கொலின் அடிகளாரைச் சந்திக்கும் வண்ணம் ஞானப்பிரகாசரைக் கேட்டுக் கொண்டார். அவருடைய ஒரேயொரு வார்த்தை மட்டும் ஞானப்பிரகாசரின் பாதையிலே புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. "If you like to serve God why don't you leave the world and join the seminary". ("நீர் கடவுளுக்குப் பணிபுரிய விரும்பினால் ஏன் உலகத்தைத் துறந்து குருமடத்தில் சேரக்கூடாது") என்பதுதான் அவ்வார்த்தை!

அருட்பணி. செ.அன்புராசா அ.ம.தி

# தூய ஆவியார் நம் துணையாளர்

## திப 2:1-11 உரோ 8:8-17 யோவா 14:15 ; 16:23-26

அருட்பணி ஜெ.ஞானசேகரன்

**1992** ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டின் பார்சலோனாவில் நிகழ்ந்த ஒலிம் பிக் விளையாட்டுகளில் 400 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் உலக அளவில் தங்கப்பதக்கம் பெற்றிருந்த பிரித்தானிய வீரர் டெரெக் ரெட்மண்ட் பங்கெடுத்தார், தன் ஓட்டத்தைத் தொடங்கிய சில விநாடி களிலே அவரது வலதுகால் தசைநாரில் உருவான பிரச்சினையால் அவர் கீழே விழுந்தார். ஒருசில விநாடிகளில் மீண் டும் எழுந்து, வலது காலை நொண்டிய படியே ஓட்டத்தைத் தொடர்ந்தார்.

அவ்வேளையில், பார்வை யாளர்கள் பகுதியிலிருந்து டெரெக்கின் தந்தை ஜிம் ரெட்மண்ட் பாதுகாப்பு வீரர் களைத் தாண்டி ஓடிவந்து, மகனைத் தாங்கியபடியே உடன் ஓடினார். ”டெரெக், இதை நீ ஓடவேண்டும் என்று கட்டாய மில்லை” என்று தந்தை கூற, மகனோ கண்ணீர் மல்க, “அப்பா நான் இதை எப்படியாவது ஓடி முடிக்க விரும்புகி றேன்” என்று கூறிய-தும், “சரி வா, நாம் சேர்ந்து ஓடுவோம்” என்று கூறி மகனைத் தன் தோள்களில் சாய்த்துக்கொண்டு ஓடினார். இறுதி ஒரு சில மீற்றர் தூரத்தை டெரெக் தனியே ஓடி முடிக்கும்படி தந்தையும் அனுப்பி வைத்தார்.

வாழ்வெனும் ஓட்டத்தில் பிரச்சினைகளால் நாம் வீழும்போது, ”நம்மைத் தூக்கி நிறுத்த யாரும் இல் லையே!” என்று அங்கலாய்க்கும்போது, அனைத்திலும் நம்பிக்கையை இழந்து நிர்க்கதியாக நிற்கும்போது அவமதிப்பு, வெறுப்பு, புறக்கணிப்பு என எத்தனையோ வலிகளைத் தாங்கிக்கொண்டு வாழ்க்கை யின் மீதான பற்றினை இழக்கும்போது நமக்குத் தோள்கொடுத்து, நமது ஓட்டத் தைத் தொடரவும், அதனை நிறைவு செய்யவும் தந்தையால் அனுப்பப்பட்ட துணையாளர் ஒருவர் இருக்கிறார். அவரே நம் தூய ஆவியார்!

இயேசுவின் உயிர்ப்பு. அவரின் விண்ணேற்றம், தூய ஆவியாரின் வருகை எனும் இந்த மூன்று விழாக் களும்தான் நமது கிறித்தவ நம்பிக்கை யின் அடித்தளமான பேருண்மைகளை வெளிப் படுத்தும் விழாக்கள். இன்று நாம் உலக விழாக்கள் கொண்டாடும் போது, எதற்காக விழாக்களைக் கொண்டாடுகிறோம் என்பதைவிட, விழாக்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதிலேதான் அதிகக் கவனம் செலுத்துகிறோம். ஒரு விழாவுக்கு எவ்வளவு செலவு செய்கிறோம் என்பதைப் பொறுத்தே அந்த விழா முக்கியத்துவம் பெறு கிறது் வெளி உலகிற்குத் தெரியவருகிறது. இன்று பகட்டும் பிரமிப் பும் பிரம்மாண்டமுமே விழாக்களின் உயிர்நாடி. ஆனால், இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னர் எவ்வித ஆர்ப்பாட்டங்களும் ஆர வாரங் களும் ஆடம்பரமுமின்றி அமைதியாக நிகழ்ந்த விழாக்கள் தான் இயேசுவின் உயிர்ப்பும். அவரின் விண்ணேற்றமும், தூய ஆவியாரின் வருகையும். இந்த விழாக்கள் ஒருநாள் கேளிக்கையாக அல் லது எரிச்சலூட்டும் உலகக் கொண்டாட் டங்களின் வரிசையில் அமையாமல், நமக்குள் மாற்றங்களை உருவாக்கும் விழாக்களாக, வாழ்நாளெல்லாம் நம் முடன் தங்கிப் புதுப்புதுப் படிப்பினைகளைக் கற்றுத்தரும் விழாக்களாக இருக்கின் றன.



இன்று நாம் கொண்டாடும் தூய ஆவியாரின் பெருவிழா எனும் “பெந்தக் கோஸ்து விழாச் சீடர்களின் வாழ்விலே பெரும் மாற் றத்தை ஏற்படுத்தியது. இந்த நாள் சீடர்களின் அச்சம் தோற்கடிக்கப்பட்டு வீரம் வெற்றி கொண்ட நாள் சீடர்களின் மூடிய கதவுகள் நற்செய்தி அறிவிப்புக்கெனத் திறக்கப்பட்ட நாள் சீடர்களின் சந்தேகங்கள் அன்பு நிரம்பிய நம்பிக்கையினால் விரட்டப் பட்ட நாள். இது அறுவடையின் நாள்! ஆம், நற்செய்தி அறிவிப்பின் வழியாக மக்களைத் திரு அவைக்கு அறுவடை செய்யும் நாள். தமது மீட்புப்பணியை வெற்றிகரமாக முடித்த இயேசுக்கிறிஸ்து மாட்சிமையுடன் விண் ணோக்கிச் சென்று தாம் ஏற்கெனவே வாக்களித்தபடி இறை ஆற்றலாம் தூய ஆவியாரை நமக்கு அனுப்பிய நாள். இன்றே திரு அவை பிறந்த நாள்! யோவான் நற்செய்தியாளர் மட் டுமே தூய ஆவியாரின் வருகை, இயல்பு, பணிகள் பற்றி நான்கு இடங் களில் பேசுகிறார் (14:16-17, 25:15:26 16:7-15). இன்றைய நற்செய்திப் பகுதியில், இயேசு விரைவில் தங்களைவிட்டுச் சென்றுவிடுவார் எனப் பெரிதும் கலக்கமுற்ற சீடர்களை இயேசு திக்கற்றவர்களாக விடவில்லை (14:18) மாறாக, இயேசுவின்மீது சீடர்கள் அன்பு கொண்டு, அவரது கட்டளைகளைக் கடைப்பிடிப்பதற்குக் கொடையாகத் தூய ஆவியாரை அருளுகிறார் (14:15). அவர் அவர்களோடு தொடர்ந்து இருப்பார், செயற்படுவார், தந்தை அனுப்பும் துணை யாளர் மூலம் இயேசு சீடரோடு இருப்பார் (14:16), அவர் அவர் களிடம் திரும்பி வருவார் (14:18), அவரது பணி யைத் தொடரச் செய்ய தந்தை மற்றொரு துணை யாளரை அனுப்பு வார் (14:16), அவரே உண்மையை வெளிப் படுத்தும் தூய ஆவியார் (14:26) என உறு-தியளிக்கிறார்.

துணையாளரும் தூய ஆவியாகும் ஒருவரா? அல்லது இருவேறு நபர்களா? என் னும் கேள்வி நமக்கு எழலாம். அவர்கள் இருவேறு நபர்கள் அல் லர் மாறாக “துணை யாளர்“, “தூய ஆவியார்” என்பவை ஒருவரின் இரு பெயர்களே எனத் துணிந்து கூறமுடியும். இருவருமே புதிய ஏற்பாட்டில் ஆள் தன்மை கொண்டவர்களாகக் காட்டப்படுகின்றனர். துணையாளருக்கும் தூய ஆவியாருக்கும் இடையே மிகுந்த ஒற்றுமை காணப்படுகிறது. துணையாளர் உண்மையை வெளிப்படுத்-துபவர் (15:16) தூய ஆவியாரே உண்மை. இருவருமே சான்று பகர்கின்றனர்.

துணையாளர் சீடர் வழியாகச் சான்று பகர்கிறார். தூய ஆவி சீடர்கள்மீது இறங்கி வந்து அவர்கள் சான்று பகர ஆற்றல் அளிக்கிறார் (திப 2:1-41). துணையாளரும் தூய ஆவியும் சீடர்களுக்குக் கற்றுக்கொடுக் கின்றனர் (14:26 16:13). எனவே, தூய ஆவியே துணையாளர், இதனையே யோவான் இவ்வாறு கூறுகின்றார்: “தந்தையிடமிருந்து நாள் உங்களுக்கு அனுப்பப்போகிற துணையாளர் வருவார். அவரே தந்தையிடமிருந்து வந்து உண் மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார்” (15:26).

இயேசு கூறிய துணையாளராம் தூய ஆவியாரின் செயற்பாடுகள் மேலா-னவை, அவருடைய பணிகள் பன்முகத் தன்மை கொண்டவை. “பராக்கிலீத்தோஸ்“ என்ற கிரேக்க மூலச்சொல்லின் பொருளான ”துணை யாளர்“ என்ற சொல் நான்கு வகைகளில் பொருள் படுகின்றன. அவை:

1. வாதிடுபவர்,
2. பரிந்து பேசுபவர்
3, ஆறுதல் அளிப்பவர்
4. ஊக்கம் ஊட்டுபவர்

சீடர்களின் வாழ்விலே செயற்பட்ட துணையாளராம் தூய ஆவியார் எவ்வாறு நமது வாழ்வில் செயலாற்றுகிறார் என்பதைச் சிந்தித்து, இன்றைய நாள் சிந்தனையை நிறைவு செய்யலாம். பல்வேறு தவறான குற்றச்சாட்டுகளுக்கும்

**வாழ்வெனும் ஓட்டத்தில்**
**பிரச்சினைகளால் நாம் வீழும்போது,**
**”நம்மைத் தூக்கி நிறுத்த யாரும் இல்லையே!”**
**என்று அங்கலாய்க்கும்போது,**
**அனைத்திலும் நம்பிக்கையை இழந்து**
**நிர்க்கதியாக நிற்கும்போது**
**அவமதிப்பு, வெறுப்பு, புறக்கணிப்பு என**
**எத்தனையோ வலிகளைத் தாங்கிக்கொண்டு**
**வாழ்க்கையின் மீதான பற்றினை இழக்கும்போது**
**நமக்குத் தோள்கொடுத்து,**
**நமது ஓட்டத்தைத் தொடரவும்,**
**அதனை நிறைவு செய்யவும்**
**தந்தையால் அனுப்பப்பட்ட**
**துணையாளர் ஒருவர் இருக்கிறார்.**
**அவரே நம் தூய ஆவியார்!**

வன்கொடுமைகளுக்கும் ஆளாக்கப்பட்ட சீடர்கள் தங்களது நற்செய்திப் பணியில் தூய ஆவியாரின் துணைகொண்டே பேசினர் (மத் 10:20 திப 6:10). இன்றைய முதல் வாசகத்தில், துணையாளராம் தூய ஆவியார் “நெருப்புப்போன்ற பிளவுற்ற நாவுகள்“ அடை யாளத்தில் “ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்து (திப 2:1-3) வெவ்வேறு மொழிகளில் பேசுவ-தற்கான ஆற்றலை வழங்குவதை-தப் பார்க்கிறோம். எனவே, நாம் நற்செய்திப் பணியின் பொருட்டு துன்ப துயரங்களைச் சந்திக்கும் வேளைகளில், நமது வலுவின்மை யால் நம்பிக்கையை இழக்கும் நிலை யில் நமக்காகப் பரிந்துபே-பசுபவராக, வாதிடுபவராக, நமக்குப் பதிலாகப் பேசுபவராகத் தூய ஆவி யார் செயற்படுகிறார் (1யோவா 2:1) எனவே, திருத்தந்தை பிரான் சிஸ் குறிப்பிடுவது போல ”நாம் எப்போதும் தனியாக இருப்பதில்லை. தூய ஆவியார் எப்போதும் நம்மில் விழித்திருக்கிறார் நம்மைப் பாதுகாக் கிறார்.”

உதவியளிப்பவரும் வழி காட்டு-பவரும் உடன் வருபவருமான தூய ஆவியார் ஆறுதலும் மனத்திடமும் தந்து ஊக்கமூட்டுகிறார் (உரோ 12:8 எபி 31:22 திப 13:15). தூய மரிய மேக்தலின் தே பாசி எனும் புனிதர் குறிப்பிடுவது போல, ”தூய ஆவியார் உண்மையின் ஆவியார் புனிதர்களின் வெகுமதி ஆன்மாக்களின் தேற்றரவாளர் இருளில் ஒளிரும் சுடரானவர் ஏழைகளின் செல்வம்.”

தூய ஆவி யானவரே திரு அவை யின் ஆன்மா. அவரே திரு அவையில் உள்ளிருந்து ஊக்குவிப்பவர். திரு அவையின் ஆன்மாவாய் இருக்கும் அவர் ஒவ்வொரு கிறிஸ்தவரின் உள்ளத்-திலும் குடிகொள்கிறார். எனவே, நம்முள் உறையும் தூய ஆவியாரின் வழி நடத்துதலை ஒவ்வொரு நாள் வாழ் விலும் உணரும் வரத்தை நாம் கேட்க வேண்டும். திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிடுவதுபோல, ”நமது இதயங் களைத் திறந்து, தூய ஆவியாரின் செயற்பாடுகளை அனுமதிப்பதன் மூலமே இறைவனின் புதிய கட்டளையை நாம் புரிந்துகொள்ள முடியும்.”

தூய ஆவியார் நம் வழிகாட்டி யாக, துணையாளராகக் கொடுக்கப் பட்டிருக்கிறார். ஆகவே, அவருக்குச் செவிமடுத்தல் அவசியம். அருளடையா ளங்கள் வழியாகத் தூய ஆவியாரே நமது உள்ளத்தைத் தூய்மை செய்பவராக, துணை வருபவராக, உறுதிப்படுத்து பவராக, அன்பில் இணைப்பவராக, பணி யில் திடப்படுத்துபவராக, நோயில் நற்சுகம் தருபவராக, உணவூட்டித் திடன் அளிப் பவராக நமது வாழ்வில் செயலாற்றுகிறார்.

இன்று நாம் கொண்டாடும் தூய ஆவியாரின் வருகை பெருவிழா நமக்குக் கற்றுத்தரும் முக்கிய பாடம் இதுதான்.. “இறைவன் வானிலிருந்து இறங்கி வந்து சிறிது காலம் நம்மோடு தங்கிவிட்டு, மீண்டும் விண்ணகம் சென்றுவிடுபவர் அல்லர் மாறாக, அவர் நமக்கும், நம்மைச் சுற்றியுள்ள படைப்பு அனைத்திற்கும் உயிர் வழங்கும் மூச்சாக எப்போதும் நம்முள் உறைந்-திருக்கும் (1கொரி 3:16) இறைவன், துணையாளர் என்பது இப்பெருவிழா பறைசாற்றும் பேருண்மை. •

# அன்பின் மகிழ்வு



**அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்**
**அகவொளி குடும்ப நல மையம்**

### குடும்பமும் தூய ஆவியும்
### அறிமுகம்

ஆண்டவருடைய உயிரப்பு பெரு விழாவிற்கு பிற்பாடு பெந்துக்கோஸ்தே விழாவை நினைவு கூறுகின்ற இந்த நாட்களிலே தூய ஆவியார் குடும்பத்திலே எவ்வாறான செயற்பாடுகளைச் செய்கின்றார் என்பதை இந்த நாட்களிலே சிந்திக்க நாம் அழைக்கப்படுகின்றோம். திருத் தூதர்பணி நூலின் இரண்டாம் அதிகாரத்தின் தொடக்கத்திலே பெந்தக்கோஸ்தே பெருவிழாவைப் பற்றி திருவிவிலியம் அழகாக குறிப்பிடுகின்றது.

மரியன்னையின் பிரசன்னத்தில் திருத்தூதர்கள் எல்லோரும் ஒரு இடத்திலே ஆண்டவர் கூறிய வாக்குறுதி நிறைவேறும் வரை காத்திருந்து செபித்தார்கள். அந்த அழகான வேளையில் தூய ஆவி அவர்கள் மேல் இறங்கி அவர்களை வலுப்படுத்திய கணம் திருஅவையின் பிறப்பு விழாவான புனித கணமாகும். அந்தக் கணத்திலிருந்து தூய ஆவியார் திருஅவையின் ஒவ்வொரு அசைவையும் வழிநடத்தி வருகின்றார்.

### குடும்பத்தில் பெந்துக்கோஸ்தே

இந்த பெந்தக்கோஸ்து விழா என்பது ஒரு சரித்திரபூர்வமாக மேல்மாடியில் நடந்த ஒரு நிகழ்ச்சி மாத்திரமல்ல. ஒவ்வொருநாளும் திருஅவையில் குறிப்பாக நடைபெறுகின்ற, சிறப்பாக எங்களுடைய குடும்பங்களில், எங்கள் இதயங்களில், எங்கள் வாழ்வின் மூலை முடுக்குகளிலே நடைபெற வேண்டிய ஒரு நிகழ்வாக இருக்கிறது.

திருத்தூதர்கள் ஒரு இடத்தியே மரியன்னையோடு ஒன்றாகக் கூடிச் செபத்திலே நிலைத்திருந்து அந்த தூய ஆவியைப் பெற்றுக் கொண்டது போல ஒவ்வொரு குடும்பமும் ஆவியை வரவேற்கின்ற, ஆவியை வழிபடுகின்ற, ஆவியானவர் குடும்பத்திலிருந்து செயற்படுகின்ற இடமாக மாற வேண்டும். தூய ஆவியார் என்பவர் திருத்துவத்தின் ஒரு ஆளாக இருக்கின்ற நிலையில் திரு அவையில் மாத்திரமல்ல குட்டித் திரு அவை இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் என அழைக்கின்ற எமது குடும்பங்களில் அவர் இருந்து செயற்படுவது மிக முக்கியமாக இருக்கிறது.

நம் அன்புக்கும் மதிப்பிற்குமுரிய போப் பிரான்சிஸ் அவர்கள் "அன்பின் மகிழ்வு" என்கின்ற திருமடலில் இவ்வாறு குறியிடுகின்றார்: "குடும்பத்திலே பல்வேறு விதமான வித்தியாசங்கள் இருக்கின்ற பொழுதும் நாம் ஒன்றாக வாழக் கற்றுக் கொள்கின்றோம். குடும்பத்திலே தான் ஆவியானவர் தாமே இருந்து எல்லாவற்றையும் குணப்படுத்தி புதுப்பிக்கின்றவராக இருக்கின்றார். குடும்பத்தில் எல்லோரரையும் ஒன்றிணைக்கும் கருவியாகின்றார்" ஒருமுறை எப்போதும் மகிழ்வோடும் நிறைவோடும் வாழுகின்ற ஒரு குடும்பத்தை பங்குக் குருவானவர் சந்திக்கின்றார். இவ்வாறு அவர்களுடைய முகங்களியே இருக்கின்ற மகிழ்வைப் பார்த்த அந்தக் குருவானவர் இந்த மகிழ்ச்சியின் இரகசியம் என்ன என்பதை அக்குடும்பத்தவரிடம் கேட்கின்றார். அந்தக் குடும்பத்தினுடைய தந்தை புன்முறுவலோடு இவ்வாறு குறிப்பிட்டார்: "ஒவ்வொரு நாளும் காலையிலே பிள்ளைகள் பாடசாலைக்கு போவதற்கு முன்பாக நாங்கள் ஒன்று கூடித் தூய அவியானவரை வரவேற்று ஒரு நிமிடம் செபிக்கின்றோம். அந்த ஒரு நிமிடம் எங்களுடைய வாழ்வின் பரிமாணங்களை மாற்றி அமைக்கின்றது. அந்த ஆவியானவர் எங்கள் குடும்பத் தில் மகிழ்வையும், நிறைவையும் தருகின்றார்.

இந்த குடும்பமானது ஒவ்வொரு நாளும் மேல்மாடி அனுபவத்தை தங்களுடைய குடும்பத்திலே ஏற்படுத்தியதன் காரணமாக, குறிப்பாக தூய ஆவியாரை அந்த குடும்பத்திற்குள்ளே வரவேற்பதன் காரணமாக அந்தக் குடும்பத்திலே எப்பொழுதும் மகிழ்வு இருந்தது.

நான் குருமடத்திலே இருந்த காலத்திலே எமக்கு முதல் அதிபராக இருந்தவர் அருட்தந்தை பிலிப் பொன்னையா அவர்கள். அவர் எங்களை குருமட மாணவர்களாக உருவாக்கிய விதம் அருமையிலும் அருமை. அவர் எப்பொழுதும் மகிழ்ச்சியாக நிறைவாக இருந்த குருவானவர். மிக மிக ஆழமான மறைபரப்புப் பணியைச் சந்த பொந்துகளுக்குள் செய்த ஒரு குருவானவர். அவர் எப்பொழுதும் எங்களுக்கு சொல்லித்தந்த பாடம்: "எதை ஆரம்பித்தாலும் தூய ஆவியாரே வாரும் (Come O Holy Spirit) என்று ஆரம்பிக்கின்ற பொழுது அந்த செயற்பாடுகள் முழு வெற்றியைத் தரும்". இதை எங்களுக்கு ஒரு வாழ்வின் தாரக மந்திரமாகக் கற்றுத்தந்தார். அவர் எந்தச் செயற்பாடுகளை செய்தாலும் எதைத் தொடங்குகின்றபோதும் தூய ஆவியே வாரும் என்கின்ற செபத்தோடு தான் ஆரம்பிப்பார். வகுப்புக்களிலும், மறையுரைகளிலும் மற்றும் வார உரைகளிலும் ஆவியாரின் கனிகளையும், கொடைகளைப் பற்றியும் பேசிக் கொண்டே இருப்பார். இப்போதும் அவரோடு குருமடமாணவர்களாக இருந்த நாட்கள் தூய ஆவியில் மூழ்கிய பசுமையான நாட்களாகவே அமைந்தன.

எனவே எமது குடும்பங்களில் ஒவ்வொரு நாளை ஆரம்பிக்கின்ற பொழுது ஒவ்வொரு செயற்பாடுகளையும் ஆரம்பிக்கின்ற பொழுது தூய ஆவியே வாரும் எங்கள் குடும்பங்களை வழிநடத்தும் (Come, O Holy Spirit and guide our family) என்று செபிக்கின்ற பொழுது அந்தக் குடும்பத்திலே இறை அருள் பெருகுவதை நாம் பார்க்கின்றோம்.



### குடும்ப வாழ்வில் உயிரை அளிக்கும் ஆவி

தூய ஆவியானவர் கடவுளுடைய மூச்சாக இருந்து குடும்ப வாழ்வை உயிருட்டமுள்ளதாக்குகின்றார். தொடக்க நூலில் கடவுள் ஆதாமைப் படைத்த பொழுது ஆதாமினுள் மூச்சை ஊதி அவனுள் வாழ்வை அளிக்கிறார். அதனால் அவன் ஒரு உயிருள்ள ஜீவனாக மாறுகின்றான். இந்த தெய்வீக மூச்சுத்தான் தூய ஆவியாராவர். தூய ஆவியானவர் தனிப்பட்ட மனிதனுடைய வாழ்வில் ஒரு உயிர் நாடியாக மாத்திரமல்ல, குடும்ப வாழ்வின் உயிர்நாடியாக விளங்குகின்றார்.

நாளாந்த வாழ்க்கையில் வருகின்ற அன்பின் கணங்கள், தியாகத்தின்கணங்கள்குழுவாழ்வின்கணங்கள்என்பவற்றிலும் தூய ஆவியானவர் தன் தெய்வீக உயிரை இந்த உறவுகளுக்குள் ஊதி குடும்ப உறவுகளைப் புதுப்பிக்கின்றார் புனிதமாக்குகின்றார். திருத்தந்தை 14ம் பெனடிக்ற் இவ்வாறு சுறுகின்றார்: **'குடும்பம் என்பது ஒரு மனித ஸ்தாபனம் மட்டுமல்ல அது ஒரு தெய்வீக நிறைந்த ஒன்று. இந்த தெய்வீக பரிமாணத்தை எப்போதும் எப்பொழுதும் உருவாக்குகின்றவர் தூய ஆவியானவர்'**. ஒவ்வொரு முறையும் தம்பதிகள் ஒருவரை ஒருவர் மன்னிக்கின்ற பொழுது, ஒவ்வொரு முறையும் பெற்றோர்கள் இரவில் விழித்து சுகவீனமுற்ற பிள்ளைகளைப் பார்க்கின்ற பொழுது, ஒவ்வொருமுறையும் சகோதரர்களின் பெரும் சண்டைக்குப் பிற்பாடு ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்ளுகின்ற பொழுது, இவை அனைத்தும் மனித செயல்கள் அல்ல. மாறாக இவை இந்தக் குடும்பத்தில் தூய ஆவியானவர் உயிரூட்டமாக இருந்து வேலை செய்கின்றார் என்பதன் அடையாளமாகும்.

இவ்வாறு தூய ஆவியார் குடும்ப உறுப்பினர்களின் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் தெய்வீக அருளைக் கொடுத்து உறவுகளைப் பலப்படுத்தி புனிதப்படுத்துகின்றாஉ. இதனை இரண்டாம் யோன் போல் அவர்கள் தன்னுடைய திருமடலில் சொல்லுகின்றார்: **'குடும்பம் என்பது முதலாவதும் உயிருட்டமுள்ளதுமான அழகுள்ள சமூகமாகும். இந்த சமூகத்தின் அழகை எப்பொழுதும் உயிருட்டமாக வைத்திருக்கின்றவர் தூய ஆவியானவர்.'** தூய ஆவியானவர் தான் குடும்பங்களிலே பொறுமையை ஒருவரை ஒருவர் மதிக்கின்ற தன்மையை துன்பங்கள் மட்டிலே மனமடிவு கொள் ளாமல் எல்லோரையும் வைத்திருப்பவர். ஆகவே தான் ஒவ்வொரு நாளும் நாம் தூய ஆவியானவரை எங்களுடைய குடும்பத்திற்குள்ளே அழைக்க அழைக்கப்படுகின்றோம்.

ஒவ்வொருநாளும் தூய ஆவியானவரின் சிறிய செபத்தோடு நாங்கள் ஆரம்பிக்க வேண்டும். **'வாரும் தூய ஆவியானவரே உம்முடைய அன்பை எம் குடும்பத்திற்குள்ளே ஊற்றும்'** எனச் செபிக்க வேண்டும். எங்களுடைய ஒவ்வொரு உணவுகளும் ஒவ்வொரு நிகழ்வுகளும் உறவுகளும் தூய ஆவியினால் புதுப்பிக்கப்பட வேண்டும்.

ஒரு முறை ஒரு குடும்பத்திலே ஒரு மகன் தந்தையிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வில கிக் கொண்டு போனான். இவ்வாறான நிலையிலே அந்த தந்தை தன்னுடைய மகனுடன் கோபத்துடன் சண்டையிடும் அணுகுமுறையை விடுத்து ஆன் மீக ஆணுகு முறையை கடைப்பிடித்தார். அவர் ஒவ் வொரு நாளும் காலையிலே தன் மகன் நித்திரையில் இருக்கும் போதே தன்னுடைய மகனின் தலைக்கு மேல் கையை வைத்து இவ்வாறு செபிப்பாராம்: **'தூய ஆவியே எம் இருவருக்குமிடையிலே அமைதியை ஊதும்'**. இவ்வாறு செபித்தபோது ஒருசில வாரத்திலேயே எந்த விதமான பேச்சு வார்த்தைகள் இல்லாமல் மகனுடைய இறுகிய இதயம் திறக்கப்பட்டது மீண்டும் அவனுடைய முகத்தில் சிரிப்பு உதித்தது. அவனுடைய உணர்வு தூய ஆவியினால் குணப்படுத்தப்பட்டது. இவ்வாறு ஒரு உடலை எவ்வாறு ஒரு மூச்சு தாங்கிக் கொள்கிறதோ அது போல தான் பரிசுத்த ஆவியானவர் குடும்பத்தையும் தாங்கிக் கொள்கின்றார்.

### முடிவுரை

நம் குடும்ப வாழ்வில் தூய ஆவியாரின் செயற்பாடுகள் ஒரு சரித்திர நிகழ்வாக அல்ல, வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் அனுபவிக்க வேண்டிய உயிரூட்டமுள்ள அனுபவமாக இருக்க வேண்டும். பெந்துக்கோஸ்தே அனுபவம் மேல்மாடியில் மட்டு மல்ல, நம் வீடுகளிலும், நம் நெஞ்சங்களிலும் நடைபெற வேண்டும். நம் குடும்பங்கள், தூய ஆவியாரை வரவேற்கும் இடமாக, அவரால் வழிநடத்தப்படும் சிற்றவைகளாக மாற வேண்டும்.

தூய ஆவியானவர் இருக்கும்போது ஒரு குடும்பத்தில், பொறுமையும், அன்பும், மன்னிப்பும், ஒற்றுமையும் மலர்கின்றன. ஆவியின் உயிர் மூச்சு இல்லாமல் ஒரே குடும்பமாக நாம் இருக்க முடியாது. ஆகவே தான், நம்முடைய ஒவ்வொரு நாளையும் **'வாரும் தூய ஆவியானவரே'** எனும் அந்த சிறிய ஆனால் ஆழமான செபத்துடன் ஆரம்பிக்க நாம் முயற்சிப்போம் மிகவும் எளிமையான ஒரு நிமிட செபம், குடும்பத்தில் உள்ள உறவுகளை புதுப்பிக்கவும், ஒருவருக்கொருவர் ஆழமான அன்பைக் காண்பிக்கவும், சிரமங்களுக்குள் ஒளிரும் நம்பிக்கையை விதைக்கவும் முடியும். தூய ஆவியானவர் எப்போதும் நம்முடன் இருக்கவேண்டும் நம்மை வழிநடத்தவும், புதுப்பிக்கவும், புனிதப்படுத்தவும் அவர் நம்மை ஏற்கெனவே எதிர்பார்த்து நம்மை நோக்கி வருகிறார்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 . 09 . 1938



உதிர்வு 14 . 07 . 2020

### அருட்பணி R.M.G. நேசநாயகம்

" நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்; என் ஓட்டத்தை முடித்து விட்டேன்
விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" (2 திமோ 4:7)

ஆண்டுகள் ஐந்து பஞ்சாய்ப் பறந்தாலும் - உங்கள் நினைவுகளின் நிழல்கள் தொடர்கின்றன
உங்கள் அன்பு மொழி கேட்க ஏங்குகின்றோம்
நீங்கள் காட்டிய இறை பாதையில்தான் - நாம் பயணிக்கின்றோம்
மண்ணோடு மறையும் காலம்வரை - எம்
நெஞ்சோடு இருக்கும் உங்கள் நினைவுகள்!
உங்கள் ஆத்மா இறைவனில் இறைப்பாறட்டும்

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை

கோவிலம்மா குடும்பத்தினர்

## பொன் விழா வாழ்த்துக்கள்

'ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள் ஏனெனில் அவர் நல்லவர்
என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு' (திபா.118)

செபமாலைக்கன்னியர் சபையில்
பணியாற்றி தனது ஐம்பதாவது ஆண்டு
நிறைவை நினைவுகூறும்
அருட்சகோதரி மேரி ஜெயப்பிரகாசி
அவர்களை வாழ்த்துவதுடன் அவரின்
பணி மேலும் சிறக்க
இறைவேண்டுதல் செய்கின்றோம்.





வாழ்த்துவோர்
குடும்பத்தினர்
மிருசுவில்

## நீங்கா நினைவில் 24 ஆண்டு

இன்று எம் நினைவில் வரும்
எங்கள் அன்புத் தந்தையின் நினைவு நாள்
காவல் பரிசோதகராய் பணியாற்றினீர்
கடமையிலும் கருணையிலும் தலைசிறந்தீர்

கிறிஸ்துவின் விசுவாசத்தில் திழைத்தீர்
அம்மாவுக்கு ஆதாரமான வாழ்க்கைத்
துணை நீர்
மூன்று பிள்ளைகளுக்கும் கல்வி தந்தீர்
அவர்களில் ஒருவரை ஆண்டவருக்கு
அர்ப்பணித்தீர்

நம் வாழ்வில் ஒளியாக இருந்தீர்
உறவுகளுக்கு உறவாய் இருந்தீர்
அன்பும் மகிழ்ச்சியும் பரப்பி
வாழ்க்கையை அர்ப்பணித்தீர்



### அமரர். G. S. பிள்ளை
13.01.1938 - 09.06. 2001

24 ஆண்டுகள் எம்நினைவில் நிலைத்து
இன்றும் எம் மனங்களில் வாழும்
அன்புள்ள அப்பா நீங்கள் !!
எங்கள் நினைவில் என்றும் வாழ்கின்றீர்கள்.

குடும்பத்தினர்

## விண்ணக வாழ்வின்
## 4ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 . 10 . 1951



உதிர்வு 03 . 06 . 2021

### அமரர் ஜோசப் விக்ரர் ஜெயராஜா

(Rose Arts)

மனங்களில் நிதம் வாழும்
மன்னன் எங்கள் அப்பா
எமை விட்டு எங்கு சென்றீர்
எப்படி நாம் கேட்போம்?

உயிருள்ள எம்முடன் உயிர் மூச்சாகி
உயிர்ப்பற்ற எம் உடைமைகளில்
உண்மையின் உருவமாகி
உறைகின்ற அன்புருவே!

கலங்கரை விளக்கொன்று
கானல் நீராய்ப் போய்

நான்காண்டு ஆனதுவே
பிரிவின் வலி நீள்கின்றது
உம் கரங்களுக்குள் எம்மை வைத்து
வழிகாட்டி உயர்வு தந்தீர்கள் - அப்பா!

உங்கள் கள்ளமற்ற அன்பையும்
உதட்டோரம் உதிர்க்கும் - உங்கள்
புன்னகையையும் காணாது
வாடி நிற்கின்றோம் -
உங்கள் ஆன்மா
இறைவன் அடியில் இறைப்பாற
இறைஞ்சிடுவோம் நிதம்...

*இல.88, 3ம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.*

*இவரின் பிரிவால் துயருறும்*
*மனைவி, பிள்ளைகள்*

AD-24

## மூவொரு கடவுளால்..

(3ம் பக். தொடர்ச்சி)

"ஒருவர் மற்றவரிடமிருந்து கற்றுக்கொள்ளுதல், இணைந்து பயணித்தல் என நடைபெறும் இந்தக் கலந்துரையாடலின் தாக்கம் நற்செய்தி அறிவிப்பு, ஏழைகளுக்கான பணி, நமது பொதுவீடாகிய இந்நில உலகின் நலம் பேணுதல், இறையியல் ஆய்வு என்பவற்றின் பண்புகளாகப் பரிமளிக்க வேண்டும்" நம்பிக்கைக் குழுமத்தில் புகுநிலைப்படுத்தல் இறைவார்த்தையைக் கேட்டல். வாழ்க்கை மாற்றம், திருவழிபாடு, கிறிஸ்தவக் குழும வாழ்விலும் அதன் நற்செய்திப் பணியிலும் பங்கேற்பு என்பவையே நம்பிக்கைக் குழுமத்தில் புகுதலை ஓர் இணைந்த பயணம் ஆக்குகின்றது. அதன் வழியாக நம்பிக்கையாளர் உயிர்ப்பு நம்பிக்கையின் அறிமுக அனுபவத்தைப் பெறுகிறார் மூவொரு கடவுள் மற்றும் திரு அவையின் ஒன்றிப்புறவில் இணைக்கவும் படுகிறார்.

இவ்வாறு நம்பிக்கையாளர் குழுமத்தில் புகுவதன் வழியாக ஒவ்வொருவரும் திரு அவையில் உள்ள பல்வேறு அழைத்தல்கள், பணிகள் என்பன வற்றுடன் இணைக்கப்படுகின்றனர். அவற்றின் வழியாக அன்னையாகிய திரு அவை தம் மக்களோடு இணைந்து பயணித்து அவர்களுக்கு வாழ்க்கைப் பயணமுறையைக் கற்றுத்தருகிறது. "அவர்கள் சொல்வதைக் கேட்டு அவர்களுடைய சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் அது பதிலளிக்கிறது.

**ஒவ்வொருவருடைய வரலாறு.**

மொழி, பண்பாடு என்பவற்றின் புதுமை வழியாக அதுவும் வளமை அடைகிறது" (Km 30). இதுவே கிறித்தவக் குழுமம் மேற்கொள்ளும் இணைந்த பயணத்தின் தொடக்கம்."நாம் எல்லாரும் ஒரே தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம்" (1கொரி 12:13). இதனால் திருமுழுக்குப் பெற்ற அனைவருக்கும் இடையே மாண்பிலும் அவரவர்அழைத்தலுக்கேற்ப நற்செய்திப் பணியாற்றும் பொதுவான பொறுப்பிலும் உண்மையான சமத்துவம் நிலவுகிறது. இதனால் "இறைமக்கள் சமூகம் முழுவதும் நற்செய்தி அறிவிப்பின் முகவரே. நாம் எல்லாரும் மறைத்தூதுச் சீடர்கள் என்பதால், திரு முழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் மறைத்தூதுப் பணியை முன்னெடுக்க அழைக்கப்பட்டவரே" ஒவ்வொருவரும் தாம் வாழும் மற்றும் பணியாற்றும் சூழமைவில் தம் வாழ்க்கை நிலைக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப மறைத்தூதுப் பணி ஆற்ற அழைக்கப்பட்டுள்ளனர். அவரவரது வாழ்க்கை நிலை, தொழில், குடிமைச் சமூக-அரசியல்-சமூக- சுற்றுச்சூழல் ஈடுபாடு என்பவற்றிற்கு ஏற்ப அவர்கள் நற்செய்திப் பணியாற்றும் முறைகள் வேறுபட்டும், தூய ஆவியாரின் துணையுடன் தேவைக்கேற்ப புதுப்புது வகைகளிலும் அவை அமையும்.

மேலும், திருமுழுக்குப் பெற்றவர்களிடம் தூய ஆவியிடமிருந்து அனைத்தையும் கற்றுக்கொள்ளும் நம்பிக்கை உணர்வு உள்ளது. இது அவர்களிடம் இயல்பாகவே எழும் நற்செய்தியின் உண்மைக்கான நாட்டம். நம்பிக்கையாளர்களின் இந்த ஒத்த உணர்வைக் கூட்டொருங்கியக்க நடைமுறை உறுதிப்படுத்தி வளர்த்து விடுகிறது. ஒரு குறிப்பிட்ட கோட்பாடோ செயற்பாடோ திருத்தூதர்சார் நம்பிக்கைக்குரியது என்பதைத் தீர்மானிக்க இந்நடைமுறை ஓர் உறுதியான அளவுகோலைத் தருகிறது.

உறுதிப்பூசுதல் எனும் அருளடையாளத்தின் வழியாகப் பெந்தக்கோஸ்தின் அருள் திரு அவையில் நிலைத்திருக்கிறது. நம்பிக்கையாளர்களை அது ஆவியாருடைய கொடைகளால் வளப்படுத்துகிறது. நற்செய்திப் பணியாற்றுவதற்கான தங்கள் தனி அழைத்தலை வளர்த்தெடுக்க அது ஒவ்வொருவரையும் அழைக்கவும் ஆற்றல்படுத்தவும் செய்கிறது.

நற்கருணைக் கொண்டாட்டம், அதிலும் சிறப்பாக ஞாயிறு திருப்பலி நம்பிக்கை வாழ்விற்கு அடிப்படையானது. "ஆண்டவரது உடலையும் உதிரத்தையும் உட்கொள்வதன் வழியாகப் பிறரோடும் அவரோடும் அவர் நம்மை ஒருடலாக உருவாக்குகிறார்". இது நம்மை இணைந்து பயணிக்க அழைக்கிறது. செயற்படுத்த சில பரிந்துரைகள்

1. தெளிதேர்வு செய்து இறைவனின் குரலை இனம்காண்பதற்கான அளவுகோல்கள் இறையியல் கண்ணோக்கில் தெளிவாகவும் ஆழமாகவும் வரையறுக்கப்பட வேண்டும். குறிப்பாக, திருவிவிலியம், திரு அவை மரபு மற்றும் ஆசிரியம் என்பன வற்றுடன் காலத்தின் அறிகுறிகளையும் முன் வைத்துக் கடவுளின் திருவுளத்தைக் கண்டறியும் முறை தெளிவுபடுத்தப்பட வேண்டும்.
2. நம்பிக்கை அனுபவத்தில் பகுத்தறிவு மற்றும் உணர்ச்சி எனும் இரு பரிமாணங்களையும் நலமாக இணைத்துக்கொள்ள வேண்டும். அதுபோல் இறையியல் சிந்தனைகளுடன் கலை மற்றும் சமூக அறிவியல்களின் பங்களிப்புகளையும் எவ்வாறு இணைத்துக் கொள்ள முடியும் என்பதுவும் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.
3. பல்வேறு அருள்பணிகளிலும் சிறப்பாக, திருமணம், பல்வேறு தொழில்கள் மற்றும் சமூகத் துறைகள் என்பவற்றிலும் கிறிஸ்தவ மனநிலையுடன் ஈடுபடுவதற்கான உருவாக்கமாகக் கிறித்தவப் புகுநிலைப் பயிற்சியை அமைப்பது பற்றிய ஆய்வுகள் தொடரப்படவேண்டும்.
4. கிறிஸ்தவப் புகுநிலைப்படுத்தல் பற்றி இன்னும் அதிகமான ஒன்றிணைந்த பார்வை உருவாக்கப்பட்டு, அது திரு அவையின் கூட்டொருங்கியக்கத் தன்மையைப் புரிந்து வாழ்ந்திட எவ்வாறு உதவமுடியும் என்பது பற்றி ஆழமாகச் சிந்திப்பது அவசியம் .
5. எல்லா நம்பிக்கையாளர்களிடமும் குழுமத்தைக் கட்டியெழுப்பவும் உலகில் நற்செய்திப் பணி யாற்றவும், நம்பிக்கைக்குச் சாட்சியம் பகர்வதற்கு மான அழைத்தலை எழுச்சியுறச் செய்யும் வகையில் உறுதிபூசுதலுக்கான தயாரிப்பை மேம்படுத்தும் முறைகள் கண்டறியப்பட-வேண்டும். ●

# புதிய திருவழிபாட்டுப் பாடல் நூல் வெளியீடு



யாழ். மறைமாவட்டத் திருவழிபாட்டு நிலையத்தால் வெளியிடப்பட்ட "நித்தமும் நினைந்திட" திரு இசை நூலினை இறைமக்கள் பெற்றுக்கொள்ளவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திருவழிபாட்டு ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை தயாகரன் அவர்கள் தெரிவித்துள்ளார். 800 திருப்பலிப் பாடல் களை உள்ளடக்கிய இந்நூல் ஒன்றின் விலை 1000 ரூபாயெனவும் இந்நூலை யாழ். மறைமாவட்ட மறைக் கல்வி நடுநிலைய வளாகத்தில் அமைந்துள்ள திருவ ழிபாட்டு நிலைய அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கோப்பாய் புனித மரியன்னை ஆலய வருடாந்தத் திருவிழா



கோப்பாய் புனித மரியன்னை ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை பத்திநாதன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த மாதம் 31ஆம் திகதி நடைபெற்றது. 22ஆம் திகதி கொடியேற் றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 30ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திரு விழாத் திருப்பலியை அமலரித்தியாகிகள் சபை அருட் தந்தை போல் நட்சத்திரம் அவர்களும் நற்கரு ணைவிழாத் திருப்பலியை யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமட அதிபர் அருட்தந்தை செல்வரட்ணம் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

# கிறிஸ்தவ கற்கைநெறி உயர்கல்வி டிப்ளோமா பட்டமளிப்பு விழா



இலங்கையின் கொழும்பு, மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மறைமாவட்டங்களில் இயங்கி வரும் புனித யோசேவ்வாஸ் இறையியல் கல்லூரிகளில் 2024ஆம் ஆண்டு நடைபெற்ற கிறிஸ்தவ கற்கைநெறி உயர்கல்வி டிப்ளோமா பட்டப்படிப்பு இறுதிப் பரீட்சைக்கு தோற்றி சித்திபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த மாதம் 31ஆம் திகதி கொழும்பு புனித யோசேவ்வாஸ் இறையியல் கல்லூரியில் நடைபெற்றது. புனித யோசேவ்வாஸ் கல்லூரியின் மறைமாவட்ட நிலையங்களில் இருந்து 87 மாண வர்கள் தோற்றிய இப்பரீட்சையில் மன்னார் மறைமா வட்டத்திலிருந்து 18 மாணவர்களும் யாழ் மறைமா வட்டத்திலிருந்து 18 மாணவர்களும் கொழும்பு மறைமாவட்டத்திலிருந்து 13 மாணவர்களும் மட்டக் களப்பு மறைமாவட்டத்திலிருந்து 7 மாணவர்களும் உட்பட 56மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டனர். இப்பரீட்சையின் முதல் 6 உயர் நிலைகளையும் மன்னார் மறைமாவட்ட மாணவர்கள் பெற்றுக்கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# திருக்குடும்பக் கன்னியர் சபைக்குப் புதிய தலைவி



யாழ். மாகாண திருக்குடும்ப கன்னியர் சபை புதிய தலைமைத்துவ குழு நிர்வாக தெரிவு அண்மையில் நடைபெற்றது. இத்தெரிவில் அருட்சகோதரி ஜொய்லின் றாஜி ஸ்ரான்லி அவ ர்கள் மாகாண தலைவியா கவு ம் அருட்சகோதரி ஜெசிக்கா அல்பேட் பற்றிக் அவர்கள் பொருளாளர் மற்றும் ஆலோசகராகவும், அருட்சகோதரிகள் மெற்றில்டா வசந்தி, கிறேசா சூசைராசன், சகாயநாயகி பஸ்ரியாம் பிள்ளை, வயலட் ஸ்ரனிஸ்லஸ் ஆகியோர் ஆலோசகர்களாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். புதிதாக தெரிவுசெய்யப்பட்ட இக்குழு வருகின்ற ஆவணி மாதம் 22ஆம் திகதி பணிப் பொறுப்பை ஏற்கவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# சுன்னாகம் பங்குப் பிள்ளைகளுக்கான முதல்நன்மை அருட்சாதனம்



சுன்னாகம் பங்கு பிள்ளைகளுக்கான முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை நிக்ஸன் கொலின் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 31ஆம் திகதி நடைபெற்றது. யாழ். மறை மாவட்ட நிதி முகாமையாளர் அருட்தந்தை நேசநாயகம் அவர்களின் தலைமையில் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியில் 13 சிறார்கள் முதல்நன்மை அருட்சாதனத்தை பெற்றுக் கொண்டனர்.

# மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான சிறப்புக் கருத்தமர்வு



சாட்டி திருத்தல வெண்புரவிநகர் புனித அந்தோனியார் ஆலய மறைக்கல்வி மாணவர்கள் மற்றும் மறையாசிரியர்களுக்கான சிறப்புக் கருத்தமர்வு கடந்த மாதம் 22ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை பாஸ்கரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இக்க ருத்தமர்வில் புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத் துவ கல்லூரி மாணவர்கள் கலந்து விளையாட்டுக்கள், குழுச்செயற்பாடுகள், கருத்துரைகள் ஊடாக மாணவர்களை வழிப்ப டுத்தினர். இந்நிகழ்வில் 88 மறை க்கல்வி மாணவர்களும் 15 மறை யாசிரியர்களும் பங்கு பற்றிப் பய னடைந்தனர். அத்துடன் வெண்புரவி நகர் புனித அந்தோனியார் ஆலய இளையோர்களுக்கான ஒன்றுகூடல் கடந்த 16ஆம் திகதி ஆலய முன்றலில் நடை பெற்றது. பங்குத் தந்தையுடனான இவ் ஒன்றுகூடலில் 50ற்கும் அதிகமான இளையோர் பங்குபற்றியிருந்தனர்.

# சுற்றுச் சூழல் தினச் சிறப்பு நிகழ்வு



கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு செயற்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட சுற்றுச் சூழல் தினச் சிறப்பு நிகழ்வு கடந்த 05ஆம் திகதி கிளிநொச்சி விவேகானந்த வித்தியாலயத்தில் நடைபெற்றது. நிறுவன இயக்குநர் அருட்தந்தை செபஜீவன் அவர்களின் ஒழுங் குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வின் ஆரம்பத்தில் மாண வர்களுக்கான சித்திரப்போட்டி நடாத்தப்பட்டு அன்றைய நாளை சிறப்பித்து பாடசாலை வளாகத்தில் ஒருதொகுதி மரக்கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டன. தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் இடம் பெற்றதுடன் இந்நிகழ்வில் சித்திரப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன. இந்நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், நிறுவனப் பணியாளர்களென 100க்கும் அதிகமானவர்கள் பங்குபற் றியிருந்தனர்.

# குருமட இறுதியாண்டு மாணவர்களின் இளையோருடனான களப்பயிற்சி



யாழ். கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி நான்காம் வருட இறையியல் மாணவர்கள், மறைமா வட்ட இளையோர் ஆணைக்குழுவின் இளையோருக்கான செயற்திட்டங்கள் தொடர்பான அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கோடு முன்னெடுக்கப்பட்ட கள அனுபவ பயிற்சி கடந்த மாதம் 25ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை ஜோன் குருஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் இளையோர் செயற்பாடுகள் தொடர்பான கருத்துரைகள், பங்குத் தரிசிப்புக்கள், இளையோருடனான சந்திப்புக்கள், கலந்துரையாடல்கள், கலைநிகழ்வுகள், விளையாட்டுக்கள் என்பன இடம்பெற்றன.











# முழங்காவில் பங்கின் ஆலய வருடாந்தத் திருவிழா

முழங்காவில் பங்கின் முழங்காவில் மாதா ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை அன்ரனிபாலா அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த மாதம் 31ஆம் திகதி நடைபெற்றது. 27ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆர ம்பமாகி 30ஆம் திகதி நற்கருணைவிழா இடம் பெற்றது. திருவிழாத் திருப்பலியை அமலரித்தியாகிகள் சபை அருட்தந்தை இம்மானுவேல் அவர்களும் நற்கரு ணைவிழாத் திருப்பலியை அமலரித்தியாகிகள் சபை அருட்தந்தை செலஸ்ரின் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர்.



இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2025ம் ஆண்டு ஆனி மாதம் 8ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.